Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 172 சுபகிருது வருடம், மாசி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை (17.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 25, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## நம்பிக்கை தளர்ந்தது



துருக்கி, சிரியாவில் தொடரும் சோகம்

12 பக்கம்

## உஷ்



உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு வேட்பாளர்களிடமிருந்து எக்கச்சக்கமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

குறிப்பாக அரச மற்றும் தனியார் துறையில் லீவு எடுத்துவிட்டு தேர்தலில் இறங்கியிருக்கும் வேட்பாளர்களிடம் இருந்தே அதிகளவு கடிதங்கள் வருகின்றனவாம்.

தேர்தல் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டால், ஊதியம் கிடைக்காமல் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கவேண்டிய நிலை இருப்பதாக இந்தக் கடிதங்களில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

# செப்டெம்பர் வரை இழுபடும் தேர்தல்?

### தேர்தல் ஆணைக்குழு - திறைசேரி பேச்சு நடக்கவில்லை வாக்குச்சீட்டுகளை அச்சடிப்பதில் மேலும் தாமதம்



•நமது நிருபர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்கான நிதியை பெறுவது தொடர்பில் நேற்று தேர்தல் ஆணைக்குழு நடத்தவிருந்த சந்திப்பில் திறைசேரியின் அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை.

இதனால் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பினை நடத்துவதற்கான வாக்குச் சீட்டுகளை அச்சடிக்கும் பணிகள் மேலும் தாமதமடையவுள்ளன.

இதற்கிடையில் தேர்தல் தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சடிப்பது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முடிவொன்றை கூறுமாறு அரச அச்சகர், நேற்று ஊடக அமைச்சுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

முற்கொடுப்பனவு இல்லாமல் கடன் அடிப்படையில்...

02 பக்கம்

## சபையை உடனடியாக கூட்டுங்கள்

### பிரதமரிடம் எம்.பிக்கள் குழு கோரிக்கை


உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் மூல வாக்குச்சீட்டுகளை உரிய நேரத்தில் வழங்க முடியாமற்போனமையானது ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல் என்பதை சுட்டிக்காட்டி, அதனை ஆராய்வதற்காக பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு சுதந்திர மக்கள் முன்னணி, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரின் கையொப்பத்துடன் பிரதமருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

02 பக்கம்

## ஜனக்கவின் அலுவலகத்துக்கு சீல் வைப்பு




கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய கொள்ளுப்பிட்டி பொலிஸார், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவரின் அலுவலகத்திற்கு நேற்று (16) சீல் வைத்துள்ளனர்.

அந்த அலுவலகத்திற்குள் அரசாங்கத்திற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

02 பக்கம்

## உணவுப் பொதிகளின் விலை 10 வீதத்தால் எகிறியது

### கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் இனி கனவில்தானா?



•த. யுவராஜ்

உணவுப் பொதி, கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகள் நேற்று (16) நள்ளிரவுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு காரணமாக பெரும் வாழ்க்கைச்சுமையை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அச்சங்கம், வாடிக்கையாளர்கள் தம்மை மன்னிக்கவேண்டுமெனவும் கோரியுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

02 பக்கம்

## மின் தடைக்கு முற்றுப்புள்ளி: தொடர்ந்து விநியோகிக்க முடிவு!

### ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய தீர்மானமென அமைச்சர் காஞ்சன அறிவிப்பு



•ம. அகிலேஸ்

மின்சாரக் கட்டணத்தை 66 வீதத்தால் உயர்த்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ள நிலையில், இனிவரும் காலங்களில் தடையில்லாமல் மின் விநியோகத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

02 பக்கம்

## நிவாரணம் வழங்க ஜனாதிபதி பணிப்பு

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்தத்தை அமுல்படுத்துவதால் சிரமங்களை எதிர்நோக்கும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு நேற்று (16) பணிப்புரை விடுத்துள்ளார்.

02 பக்கம்

## சப்ரகமுவ பல்கலை மூடல்

### முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய அனைவருக்கும் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று (16) மாலை அறிவித்தது. முதலாம் ஆண்டு மாணவர்கள் தவிர, ஏனைய அனைத்து மாணவர்களும் நேற்று மாலை 04 மணிக்கு முன்னர் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக ஒன்பது மாணவர்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்நிலையிலேயே பல்கலைக்கழக நிர்வாகம் மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

## மியன்மாருக்கு பறந்தார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது பாரியார் அயோமா ராஜபக்ஷவும் நேற்று (16) அதிகாலை மியன்மார் நோக்கிப் பயணமாகியுள்ளனர். அவர்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்குப் பயணமாகியுள்ளனர். அங்கிருந்து அவர்கள் மியன்மாருக்குப் பயணமாக திட்டமிடப்பட்டுள்ளது.

மலேசியன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான எம்.எச்-178 என்ற விமானத்தின் மூலம் அதிகாலை 12.25 மணிக்கு அவர்கள் புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## கடன் மறுசீரமைப்புக்கு விசேட திட்டத்தைத் தயாரிக்கும் இந்தியா

### சீனாவை ஆதரிக்கக் கோரவும் ஏற்பாடு



•நமது விசேட செய்தியாளர்

பொருளாதார ரீதியாக கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ள நாடுகளுக்கு உதவும்முகமாக கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு தயாராகியுள்ள இந்தியா, பாதிக்கப்பட்ட அரசாங்கங்களிடமிருந்து பெறவேண்டிய கடனை குறைக்குமாறு சீனா உள்ளிட்ட பலம்பொருந்திய நாடுகளைக் கோரவும் தீர்மானித்துள்ளது.

இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள ஜீ20 நாடுகளின் கூட்டத்தொடருக்கு முன்பதாக இடம்பெறவுள்ள கூட்டத்தில் ஏனைய கடன் வழங்கும் நாடுகளை இந்தியா வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

எலெக்சன் வருமா இல்லையா என்று யோசிச்சு வாக்காளர்கள் குழம்புறாங்களோ இல்லையோ வேட்பாளர்கள் எல்லாம் நல்லா குழம்பிப் போயிருக்கிறாங்கள்.



## மலையக வீட்டுத் திட்டத்தின் தற்போதைய நிலைவரம் என்ன?



### எதிர்பார்க்கை குறித்து இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு ஜீவன் விளக்கம்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின்கீழ் மலையகத்தில் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (16) விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

02 பக்கம்

## புற்றுநோய் வைத்தியசாலையில் மருந்துகள் சட்டவிரோத விற்பனை

### பிரதான சந்தேக நபருக்கு விளக்கமறியல்



மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட மருந்துகளை திருடி விற்பனை செய்துவந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட வைத்தியசாலையின் மருந்தாளரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (16) உத்தரவிட்டது.

02 பக்கம்



மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மின்சக்தி, எரிசக்தி அமைச்சுக்கு முன்பாக வாடிக்கையாளர்கள் இருவர் நேற்று (16) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# தேர்தல் சுற்றுநிருபத்துக்கு எதிரான மனு விசாரணைக்கு!

## பெப். 23இல் எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்வதை இடைநிறுத்தும் வகையில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹப்புஹின்ன வெளியிட்ட சுற்றுநிருபத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் நேற்று (16) தீர்மானித்தது.

பிரியந்த ஜயவர்தன, மூர்து பெர்னாண்டோ, அசல வெங்கப் புலி ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சர்வஜன வாக்குரிமைக்கு இடையூறு ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சி என்பதனால் இந்த மனு மீதான விசாரணையை விரைவில்



மேற்கொள்வதற்கான திகதியை அறிவிக்குமாறு மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உப்புல் ஜயசூரிய, நீதியரசர்கள் குழாத்திடம் கோரிக்கை விடுத்தார்.

அமைச்சரவை செயலாளரினால் விடுக்கப்பட்ட அறிவிப்பிற்கு அமைய வெளியிடப்பட்ட குறித்த சுற்றுநிருபம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் ஒரு சில மணித்தியாலங்களில் வாபஸ் பெறப்பட்டதாக சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கும் கவலை தெரிவித்துள்ளதாக அவர் கூறினார். ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

# மகா சிவராத்திரி நாளை

உலகளாவிய ரீதியில் வாழும் இந்துக்களால் மகா சிவராத்திரி விரதம் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்துக்களின் மிக முக்கியமான விரதங்களில் ஒன்றாகக் கருதப்படும் மகா சிவராத்திரி, சிவபெருமானுக்குரியதாகும்.

இலங்கையில், பஞ்ச ஈச்சுரங்கள் உள்ளிட்ட அனைத்து சிவன் ஆலயங்களிலும் ஏனைய கோயில்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. நாளைய தினம் காலை முதல் பூஜைகள் இடம்பெறவுள்ளதுடன் நான்கு சாமப் பூஜைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

### செப்டெம்பர் வரை...

எந்த வேலைகளையும் செய்ய வேண்டுமென அரசாங்கம் விசேட சுற்றறிக்கை ஒன்றில் அறிவுறுத்தியுள்ள நிலையில், அது தொடர்பில் அரச அச்சகத்திற்குப் பொறுப்பான ஊடக அமைச்சு இதற்குரிய தீர்மானத்தை எடுக்க வேண்டுமென அரச அச்சகர் அமைச்சின் செயலாளரை கேட்டுள்ளார்.

இதற்கிடையில் தேர்தலுக்குரிய நிதியை வழங்காமல் திறைசேரி இழுத்தடிப்பைச் செய்யுமானால் எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள நீதிமன்ற விசாரணையில் இவற்றை சுட்டிக்காட்டி தேர்தல் நடத்த போதுமானளவு காலஅவகாசத்தை தேர்தல் ஆணைக்குழு கோருமென சொல்லப்படுகிறது.

எவ்வாறாயினும், இப்போதைய நிலையில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் அது மீண்டும் செப்டெம்பரில் நடத்தப்படும் வாய்ப்பே இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கடன் மறுசீரமைப்புக்கு...

இது தொடர்பில் இந்திய அரசின் மூத்த அதிகாரியொருவரை சுட்டிக்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்பாட்டில் உலக வங்கி, இந்தியா, சீனா, சவூதி அரேபியா, அமெரிக்கா உட்பட ஏழு நாடுகள் பங்கேற்கும் கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே இந்தியா முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியா இதற்கென விசேட முன்மொழிவுத் திட்டமொன்றை தயாரித்து வருவதாகவும் சீனா உள்ளிட்ட நாடுகளை வற்புறுத்தி சிரமத்தில் உள்ள நாடுகளுக்கு கடன் மறுசீரமைப்புக்கு உதவ கோரவுள்ளதாகவும் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

### மலையக வீட்டுத் திட்டத்தின்...

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மூவர் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், திட்டமிடல் பிரிவு அதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

மலையக மக்களுக்காக இந்தியா வழங்கிய 4ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் ஒரு சில பகுதிகளில் இன்னும் முழுமைப்படுத்தப்படாமல் உள்ள நிலையில், அவற்றை பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் சம்பந்தமாக, இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கமைய, முன்னதாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் 10ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாதநிலை காணப்படுவதால், மேலதிகமாக தேவைப்படும் உதவிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

முதலில் 4ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்திய பின்னர், 10ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும், பயனாளிகள் தேர்வு குறித்தும் இச்சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள், ஸ்மார்ட் வகுப்பறை திட்டம் தொடர்பாகவும் இரு தரப்புக்குமிடையில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

### ஜனக்கவின் அலுவலகத்துக்கு...

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தற்போது வெளிநாட்டில் இருப்பதாகவும், அவர் நாடு திரும்பியதும் அவர் முன்னிலையில் அலுவலகம் மீண்டும் திறக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### நிவாரணம் வழங்க...

இதன்படி, மின் பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதுடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல், மத ஸ்தலங்கள் மற்றும் அரச கல்வி நிறுவனங்களுக்கு சூரிய மின் தகடுகளை வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

2023 ஜனவரி 05ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் கட்டணத் திருத்த முன்மொழிவுக்கு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் (15) அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பிரபாகரன் பற்றிய விடயத்தினால் படையினரின் கெடுபிடி அதிகரிக்கும்



## அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்ற கூற்று காரணமாக பொதுமக்கள் மீதான படையினரின் கெடுபிடி அதிகரிக்கும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (16) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“தமிழீழத் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்” என பழ நெடுமாறன் பற்ற வைத்த அரசியல் தீ அவர் எதிர்பார்த்ததைவிட, அவர் நினைத்ததை விட அனைத்து திசைகளிலும் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கின்றது.

கொல்லப்பட்டவர் என்று கூறப்படுகின்ற ஒருவர் உயிருடன் இருக்கின்றார் என்பது மகிழ்ச்சியே. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் தம் உறவுகள் மீண்டும் உயிரோடு வரவேண்டும், அவர்களை காண வேண்டும் என்றே போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தலைவர் உயிருடன் இருக்கின்றார். அவருடைய உறவுகள் எங்களுடன் தொடர்புகளில் இருக்கின்றனர் என அரசியல் குளிர்காய நினைப்பவர்கள் நீண்ட காலம் குளிர் காய முடியாது என்பது மட்டும் உண்மை.

இக்கூற்றினைத் தொடர்ந்து ஜனநாயக வழியில் கொள்கை அரசியல் செய்பவர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் குறிவைக்கப்படலாம். மேலும் படைமுகாம்கள் பலப்படுத்தப்படலாம். படையினரின் கெடுபிடிக்கு பொதுமக்கள் உள்ளாகலாம், எதிர்ப்பு போராட்டம் தமிழர் பகுதிகளில் விரிவடையலாம், இத்தகைய சூழ்நிலையை விரும்புகின்றவர்களும் இன அழிப்பாளர்களே.

தமிழீழத் தலைவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை அறிவது இந்திய, இலங்கை புலனாய்வாளர்களின் வேலை. அவ்வாறு இருந்தால் இந்திய அரசு அவருக்கு கொடுக்கின்ற அதி உயர் கௌரவமாக அரசியல் கைதி நிலையிலிருந்து விடுவித்து விடுதலைப் புலிகளின் தலைமையகத்தை பழ. நெடுமாறன் பாதுகாப்பு படையுடன் ஆதரவுடன் தமிழகத்தின் தென்கோடியில் வைத்திருக்க இடம் கொடுக்குமா?

விடுதலைப்புலிகள் தலைவரின் மூச்சுக்காற்றினை எவராலும் தடுக்கவோ, அழிக்கவோ, கொலை செய்யவோ முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் தொடர்பில் ஆராய பாராளுமன்ற விசேட குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை அமைக்கும் பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் இந்த விசேட குழு அவதானம் செலுத்தவுள்ளது. தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் தொடர்பில் உண்மைகள் ஆராயப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து பொருத்தமானதா இல்லையா என பரிந்துரைகளை வழங்குவதற்கு பாராளுமன்ற விசேடக்குழுவை நியமிக்குமாறு 14 எம்.பிக்கள் சபாநாயகரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்ததையடுத்தே மேற்படி பிரேரணை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### புற்றுநோய் வைத்தியசாலையில்...

மகரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்ற மருந்துகளை சுமார் 20ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் பிரசன்ன அல்விஸ் விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்தார்.

சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட அதிகாரிகள் நான்கு இலட்சத்து 25 ஆயிரத்து 970 ரூபா பணம் மற்றும் அந்தளவு பெறுமதியான மருந்து வகைகளையும் மீட்டுள்ளனர்.

வீட்டில் இருந்து மீட்கப்பட்ட மருந்துப் பொருட்கள் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருந்த பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட மருந்துகளே அவ்வாறு மீட்கப்பட்டதாகவும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

எனினும், மருந்தாளராக அவர் கடமை புரிவதால் வீட்டில் மருந்துகளை வைத்திருக்கும் உரிமை உண்டு என அவர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் மன்றுக்கு தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே சந்தேக நபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### சபையை உடனடியாக...

தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு நிதி அளிக்கப்படாமையால் திறைசேரியானது தனது பொறுப்பை வெளிப்படையாக மீறியுள்ளது. இதன் காரணமாக நாட்டின் ஜனநாயக சுதந்திரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி முகாமைத்துவம் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் என்பதுடன் அரசியலமைப்பின் பிரகாரம் மக்கள் பிரதிநிதிகளுக்கான பொறுப்புமாகும்.

இதன் காரணமாக, நாட்டின் நிலைமையை ஆராய்வதற்கு நிலையியற் கட்டளைச் சட்டம் 16க்கு அமைவாக உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் டலஸ் அழகப்பெரும, அநுர பிரியதர்ஷன யாப்பா, விமல் வீரவங்ச, தயாசிறி ஜயசேகர, வாசுதேவ நாணயக்கார, ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ வித்தாரண, அத்துரலியே ரத்ன தேரர், டிலான் பெரேரா, உதய கம்மன்பில, நாலக கொடஹேவா, பிரியங்கர ஜயரத்ன, சரித்த ஹேரத், ஜயந்த சமரவீர ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.02.15

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5032 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,229,078.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 2 4 7 5 4 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3274 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,119,078.80
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 18 29 38 44

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1487 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,723,774.40
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 0 5 4 4 4 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1062 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,768,772.40
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 11 19 67 82

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 341 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,944,774.40
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 02 18 34 51 — விசேட இலக்கினம் மேஷம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1380 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 300,407,582.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 17 29 66 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

### உணவுப் பொதிகளின்...

இன்று (நேற்று) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், உணவுப் பொதி, கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு காரணமாக குறித்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள தீர்மானித்தோம்.

இதன்படி, உணவுப்பொதி, கொத்து மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகள் 10வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளன.

இத்தனை நாட்கள் நாம் பொறுமையாக இருந்தோம்.

காஞ்சனவுக்காகவும் இன்னும் சிலருக்காகவும் நாம் தொழில் செய்ய முடியாது. மின் கட்டண அதிகரிப்பினால் உணவுப்பொதி, கொத்துரொட்டி, ப்ரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 10வீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளோம். எங்களை வாடிக்கையாளர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை, தாள்கள், அச்சுப் பிரதிகள் ஆகியவற்றின் விலைகளை ஐந்து ரூபாவால் அதிகரிக்க தொடர்பாடல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு காரணமாக இவ்வாறு விலை அதிகரிக்க நேரிட்டதாக அச்சகத்தின் தலைவர் இந்திரஜித் பெரேரா நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

### மின்தடைக்கு முற்றுப்புள்ளி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கையை அவர் மேற்கொண்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் காஞ்சன இந்த விடயத்தை தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மின் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி கிடைத்துள்ள காரணத்தினால் நாட்டிலுள்ள அனைவருக்கும் தடையின்றி மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கினார். அதற்கு முன்னேற்பாடான விதத்தில் கடன் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தோம்.

நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு 22பில்லியன் ரூபா நிதியை நாம் இலங்கை வங்கியிடம் கோரியிருந்தோம். அந்த நிதியை வழங்குவதற்கு அவர்கள் சம்மதம் வெளியிட்டுள்ளார்கள்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 118பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. அதற்கென 50 பில்லியன் ரூபாவை மேலதிகமாக கோரியிருந்தோம்.

மின்சார சபையின் பழைய கடன்களை மீள செலுத்துவதற்காகவே கட்டண மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுவதில் உண்மையில்லை. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவை ஈடுசெய்யும் வகையிலேயே கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலாபத்தை அல்லது மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளின் அடிப்படையில் இலங்கை மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்றன மத்திய வங்கியிடமிருந்தோ திறைசேரியிடமிருந்தோ நிதியை பெற்றுக்கொள்ள முடியாது. தற்போதைய கட்டண மறுசீரமைப்பின் உண்மை நிலைமையை எதிர்வரும் மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல்வாரத்தில் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

எதிர்வரும் ஜூலை மாதமளவில் மீண்டும் கட்டண மறுசீரமைப்பு மேற்கொள்ளும்போது தற்போதைய நிலைமையில் ஏதேனும் மாற்றங்களைக் கொண்டுவந்து அதன் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்க முடியுமா என்பதை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அது பற்றி ஆராய முடியும்.

எதிர்வரும் காலத்தில் மின் கட்டணத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணத் திட்டத்தை முன்மொழியுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார். அதன் பிரகாரம் மின்சக்தி, எரிசக்தி அமைச்சும் நிதி அமைச்சும் இணைந்து நிவாரணத் திட்டம் தொடர்பில் கலந்துரையாட எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டத்தை உடனடியாக எம்மால் அமுல்படுத்த முடியாது. இன்னும் சில மாதங்களில் அமுல்படுத்தலாம் என நம்புகிறோம்.

அரச கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மதஸ்தலங்களுக்கு இந்திய கடன்திட்டத்தைப் பயன்படுத்தி நிவாரணம் வழங்குமாறும் ஜனாதிபதி எமக்குக் கூறியுள்ளார். இந்திய கடன்வசதியளிப்பின் கீழ் 100 மில்லியன் டொலர் நிதி உதவியில் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்றார்.

# இந்தியக் கடற்றொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்தி; உண்மையைக் கண்டறியுமாறு பொலிஸாரிடம் டக்ளஸ் வலியுறுத்தல்

இந்தியக் கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாரை கேட்டுள்ளதுடன், அவ்வாறான சம்பவம் நடைபெற்றிருக்குமானால் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு சூழலிலும் யாரும் வன்முறைகளை கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது எனவும், எமது தொப்புள்கொடி உறவுகள் பாதிக்கப்படாத



வகையில் இந்த விவகாரம் கையாளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடல் வளத்தை அழிக்கும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இராஜ தந்திர ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் குறித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும், அவை போதுமானளவு பலனளிக்காத நிலையில், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இந்தியத் தலைவர்களுடன் இதுதொடர்பாக கலந்துரையாடி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் மற்றும் இந்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை ஆகியோருடனும் இவ்விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்திருந்ததுடன், விரைவில் புதுடில்லி மற்றும் தமிழகத்தின் மேலும் பல உயர் மட்டத் தலைவர்களையும் சந்தித்து பேச்சுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில், இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத அத்துமீறல்கள் சடுதியாக அதிகரித்துள்ளதாக கவலை வெளியிட்டுள்ளதுடன், பொலிஸாருக்குத் தேவையான ஆலோசனைகளை கடற்றொழில் அமைச்சர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியா – கிரஹரி வாவியில் மிதக்கும் சடலம்



நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் உள்ள கிரஹரி வாவியின் நடுப்பகுதியில் சடலமொன்று மிதப்பதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பயணிகள், படகு சவாரியில் ஈடுபடுவர்கள் கிரஹரி வாவியில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். நுவரெலியா மாவட்ட நீதவான் ஸ்தலத்துக்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டதன் பின்னர், சடலத்தை வாவியிலிருந்து மீட்க நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையின் தண்ணீரில் கிருமித் தாக்கம் செறிந்து இருப்பதாக தகவல்

### ஊரவருக்கு பதில் சொல்ல முடியாதென்கிறார் பொறுப்பு வாய்ந்த அதிகாரி

யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கிநின்று சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு திடீரென வயிற்றோட்டம், வாந்திபேதி மற்றும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

குறித்த நோய்த்தாக்கம் ஏற்பட்டவர்களை வைத்தியசாலையின் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வைத்தியசாலையின் தண்ணீரில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இவ்வாறான நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் குடிநீர்க் கிணறு மற்றும் நீர்த்தாங்கி என்பன நேற்று முன்தினம் (15) சுத்தம் செய்யப்பட்டது. சுத்தம்செய்யப்பட்ட பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் யாழ். அலுவலகத்தில், வைத்தியசாலையின் தண்ணீர் பரிசோதனை செய்யப்பட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அந்தத் தண்ணீரில் கிருமித்தாக்கம் செறிந்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்தத் தகவல் உண்மையா அல்லது பொய்யா என உறுதிப்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். அலுவலகத்திற்கு ஊடகவியலாளர் ஒருவரால் தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அந்த அழைப்பில் ஊடகவியலாளர் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டு குறித்த விடயத்தை வினவினார், அதற்கு தேசிய நீர் வழங்கல மற்றும் வடிகாலமைப்புச் சபையின் யாழ். அலுவலகத்தின் பொது முகாமையாளர், "இந்த விடயம் குறித்து என்னிடம் கருத்து கேட்கும் அதிகாரம் உங்களுக்கு இல்லை, நீங்கள் என்ன நோக்கத்திற்காக கேட்கின்றீர்களென எனக்கு தெரியவில்லை, இது இரகசியம். ஆகையால் உங்களுக்கு கூறவேண்டிய அவசியம் இல்லை, தகவல் கூறவேண்டுமானால் வைத்தியசாலையின் பணிப்பாளர் வந்து கூறினால்தான் தகவலை என்னால் வழங்க முடியும். ஊரவர்களுக்கு எல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை" எனக் கூறினார்.

அதற்கு அந்த ஊடகவியலாளர், "ஊரவர்கள் அல்ல, ஊடகவியலாளர் பேசுகிறேன்" என்று மீண்டும் கூறியவேளை, "ஊரும் ஊடகமும் ஒன்றுதான்" எனப் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறிவிட்டு அழைப்பை துண்டித்தார்.

உரிய விடயத்தை மக்களுக்கு தெரியப்படுத்தி மக்களை பாதிப்புகளிலிருந்து காப்பாற்ற வேண்டியது ஊடகங்களது தலையாய கடமை. இவ்வாறிருக்கையில், ஊடகங்களுக்கு பொறுப்புவாய்ந்த விதத்தில் பதிலளிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளது கடமை. இவ்வாறு அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதால் மக்களுக்கு உண்மை நிலை தெரியாமல் பாதிப்புகள் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

## இராணுவ வாகனம் – மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி

*(கண்டி நிருபர்)*

இராணுவ வாகனமும் மோட்டார்சைக்கிளும் மோதியதில் ஒருவர் பலியாகியுள்ளதாக அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அலவத்துகொடை பொலிஸ் பிரிவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்லேகலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இராணுவ வாகனம் எதிர்த்திசையில் வந்த மோட்டார்சைக்கிளுடன் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மரணித்தவர் உக்குவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயது நபராகும்.

காயமடைந்தவர் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு மரணித்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் இராணுவ வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 6 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை லங்கா சதொச குறைப்பு

லங்கா சதொச மேலும் 6 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கு 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 375 ரூபாவாகும்.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 149 ரூபாவாகும்.

இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி ஒரு கிலோ 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 198 ரூபாவாகும்.

ஒரு கிலோ சிவப்பு பருப்பு 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 358 ரூபாவாகும். ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு அரிசி 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 164 ரூபாவாகும். இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசி ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 179 ரூபாவாகும்.

## வீட்டில் தவறி விழுந்து உயிரிழந்ததாக சொல்லப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம்

சிலாபம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் வீட்டிற்குள் தடுமாறி உயிரிழந்துள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த நபரின் மகனே குறித்த முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார்.

**பிரேதப் பரிசோதனையில் கழுத்தில் வெட்டுக்காயங்கள் அடையாளம்**

உயிரிழந்த 49 வயதான அவர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனையின்போது, சிலாபம் வைத்தியசாலையின் நீதித்துறை வைத்திய அதிகாரி, பாதிக்கப்பட்டவரின் கழுத்தில் வெட்டுக்காயத்தை அவதானித்ததையடுத்து, மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி உயிரிழந்தவரின் மரணம் கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடை நீடிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடையை நீடித்து நீதிமன்றம் நேற்று (16) உத்தரவிட்டுள்ளது.

அதன்படி அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்பு கூற வேண்டும் எனவும் அதன் காரணமாக அவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறு கோரி முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருநாகல் ஏ.ரி.எம். கொள்ளையர் கைது

குருநாகல் கட்டுவன ரயில் நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட வங்கி ஒன்றின் ATM இயந்திரத்தை உடைத்து சுமார் ஒரு கோடி ரூபாவை கொள்ளையடித்த நபர் பிங்கிரிய பிரதேசத்தில் நேற்று (16) கைதுசெய்யப்பட்டதாக குருநாகல் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பணத்தில் சுமார் 55 இலட்ச ரூபா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம் எப்பாவல பகுதியைச் சேர்ந்த 33 வயதானவர் என்றும் ATM இயந்திரம் பழுதுபார்க்கும் நிறுவனம் ஒன்றில் முன்னர் சாரதியாக பணியாற்றியவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வெளிநாடுகளிலிருந்து வந்த போதைப்பொருட்கள் மத்திய தபால் பரிமாற்றகத்தில் கண்டுபிடிப்பு

ஜேர்மனி, இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட எக்ஸ்டசி மாத்திரைகள் மற்றும் குஷ் ரக போதைப்பொருட்கள் என்பன மத்திய தபால் பரிமாற்றகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, பாணந்துறை, பொரலஸ்கமுவ, பாதுக்கை மற்றும் பிலியந்தலை ஆகிய பகுதிகளிலுள்ள போலி முகவரிகளுக்கு பொதிகள் ஊடாக அனுப்புவதற்கு தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் மத்திய தபால் பரிமாற்றகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த பொதிகளை சுங்கப்பிரிவினர் சோதனையிட்ட நிலையில் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 207 எக்ஸ்டசி மாத்திரைகள் மற்றும் 750 கிராம் குஷ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அதன் பெறுமதி 13 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 12 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

12 மாவட்டங்களில் டெங்கு அபாய நிலைமை காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களும் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை 3,637 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பணத்தை திருடியவரை கைதுசெய்ய நடவடிக்கை



ரஷ்ய சுற்றுலாப் பயணிகளிடமிருந்து ஆறு மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை திருடிய சந்தேக நபரைத் தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சந்தேக நபரை அடையாளம் காணும் நோக்கில் அவரது புகைப்படம் பொலிஸ் ஊடகப் பிரிவினால் ஊடகங்களுக்கு அனுப்பி வக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தேக நபர் உனவட்டுனவில் சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகளிடமிருந்து பணத்தை திருடியுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் விடுதியின் உரிமையாளர், அவரது மகன் உள்ளிட்ட மற்றுமொரு நபரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்நிலையில், பிரதான சந்தேக நபரான வெல்பிட்ட கமகே சந்தன சமன் குமார என்ற 40 வயதான எல்லகாவ பகுதியைச் சேர்ந்த நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். இது தொடர்பில் தகவல் அறிந்தால் 0768477810 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரிய வெற்றி, சுபசெய்தியால் மகிழ்ச்சி, ஆலய தரிசனத்தால் மன அமைதி.

**ரிஷபம்:** எதற்கும் மௌனம் காப்பது நல்லது, அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** காதல் நிறைவேறும், பயணங்கள், சுற்றுலாக்கள் அமையும், பெண்களால் லாபம்.

**கடகம்:** கோபதாபங்கள், எரிச்சல், டென்ஷன், வீண் விரயங்கள், மறதி, நஷ்டங்கள் உண்டு.

**சிம்மம்:** ஆன்மீக பயன்கள், தெய்வபக்தி ஏற்படும், நல்ல எண்ணங்கள் தெளிந்த மனதுடன் நடைபோடுவீர்கள்.

**கன்னி:** நினைத்த பயணங்கள் அமையும், மனமகிழ்ச்சி, உற்சாகம் மற்றும் தாய்வழி ஆதரவு உண்டு.

**துலாம்:** சமயோசிதமாக புத்தியுடன் செயலாற்றுவீர்கள், சகோதர ஆதரவு உண்டு.

**விருச்சிகம்:** பணவரவுக்கான வாய்ப்புண்டு, பேச்சில் நளினம் இருக்கும், கவிஞர்களுக்கு கற்பனை வளம் மிகும்.

**தனுசு:** மன தைரியத்தடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**மகரம்:** வீண் விரயங்கள், டென்ஷன் ஏற்படும், பண விவகாரங்களில் கவனமாக செயல்படுங்கள்.

**கும்பம்:** தொட்டது துலங்கும் நாள், வீட்டுக்காக பொருள் வாங்குவீர்கள், மூத்த சகோதரரால் உதவிகள் உண்டு.

**மீனம்:** பயணங்களால் உடல் அசதி ஏற்படும், குறை நிறைகளைப் பற்றி விவாதிப்பீர்கள்.

| | |
|---|---|
| திதி | : துவாதசி இரவு 11.36 வரை பின் திரயோதசி |
| நட்சத்திரம் | : பூராடம் இரவு 8.28 வரை பின் உத்திராடம் |
| யோகம் | : மரண யோகம் (சுப காரியம் நன்மை இல்லை) |
| வார சூலை | : தென் கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : மு.ப. 6.31 - 7.31 மணி வரை |
| ராகு காலம் | : 11.01 – 12.31 மணி வரை |
| எமகண்டம் | : 3.31 - 5.01 மணி வரை |
| குளிகை | : 8.01 - 9.31 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : அசுவினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## கினிகத்தேனையில் தனியார் பஸ்ஸுடன் இ.போ.ச. பேரூந்து மோதி விபத்து

*(இரா.யோகேசன்)*





ஹட்டனிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும் கொழும்பிலிருந்து ஹட்டன் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸும் கினிகத்தேனை பேரகமுல்லையில் நேருக்கு நேர் மோதி நேற்று (16) விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின்போது கண்டியிலிருந்து வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் சிறு சேதத்திற்குட்பட்டுள்ளது. இவ்விபத்தில் நேருக்கு நேர் மோதிக்கொண்ட இரு பஸ்களிலும் பயணித்த பயணிகள் சிறு காயங்களுக்குட்பட்டதில் கினிகத்தேனை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

இருந்தபோதும் இவ்விபத்தில் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படாதவிடத்தும் இரு பஸ்களிலும் பயணித்த அதிகமானவர்கள் சிறு காயங்களுக்கு உட்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, பெப்ரவரி 17ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

## பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் டக்ளஸ்!

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதியில் உள்ள தொல்லியல் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அனைவரின் செயற்பாடுகளும் அமைவது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக இந்துக்களினால் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூஜை வழிபாடுகளை தொடர்வதற்கு, அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றின் கடமைசார் செயற்பாடுகள் இடையூறாக அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் (15) கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டபோதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், குறித்த விடயம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துகளையும் எதிர்பார்ப்புகளையும் கேட்டறிந்த அமைச்சர், மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் அமையுமாயின், அவை தொடர்பாக கரிசனை செலுத்தப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதுடன், துறைசார் அமைச்சர்களுடனும் பிரஸ்தாபித்து சுமூகமான தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக, தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன்போது, சம்பந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாக சென்று நிலைமைகளை ஆராய்வதுடன், சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து சுமுகமான தீர்வைக் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டக்ளஸின் இந்த செயற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது. அமைச்சரவையில் இருக்கும் தமிழ் அமைச்சர் என்ற வகையில் தமிழர் பாரம்பரியம், அவர்களின் பூர்வீக நிலங்கள் தொடர்பில் நல்லதொரு அறிவைக் கொண்டிருப்பவர் அவர். தமிழர்கள் தமது பூர்வீகத்தை இழந்து தவிப்பதையும் அதனால் ஏற்பட்டுள்ள உளைச்சல்களையும் அவருக்கு எவரும் கூறத் தேவையில்லை. ஈழத்துத் தமிழர் போராட்டத்தில் ஆயுதப்போராளியாக இருந்து இப்போது ஜனநாயக ஓட்டத்திற்கு வந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தமிழர் பிரதேசத்தின் தொன்மையை பாதுகாக்கும் நோக்குடன் நேரடியாகவே அங்கு விஜயம் செய்திருப்பது நல்லது.

ஆனால், வெடுக்குநாறி மட்டுமல்ல, வடக்கு – கிழக்கின் முக்கியமான, அதுவும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட புனிதப் பிரதேசங்களின் மீது நடத்தப்பட்டிருக்கும் அத்துமீறல்களை ஆராய அமைச்சர் டக்ளஸின் இந்தப்பயணம் கால்கோளிட வேண்டும். தமிழர் பிரதேசத்தின் அத்துமீறல்களை எதிர்த்து நடத்தப்படும் போராட்டங்கள் தமிழர் தரப்பு அரசியலுக்கு உதவலாம். ஆனால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்ட இடங்களை நேரடியாகவே பார்ப்பதென்பது பிரச்சினையைத் தீர்க்க உதவிடும். அங்குள்ள பிரச்சினைகளை அமைச்சரவையினதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

வன்னியில் குருந்தூர் மலை, கிழக்கில் கோணேஸ்வரம், மன்னாரில் திருக்கேதீஸ்வரம் என்று தமிழர்தம் தொன்மைவாய்ந்த பிரதேசங்களில் வெளியாரின் அப்பட்டமான அத்துமீறல்கள் நடக்கின்றன. இவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். அமைச்சர் டக்ளஸ் இப்படியான இடங்களுக்கும் சென்று அந்தப் பகுதி பொறுப்பாளர்களின் கரிசனையை அறிய வேண்டும். ஏற்கனவே அங்கு இடையூறுகளை ஏற்படுத்திவரும் அரச அதிகாரிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சராசரி அரசியல்வாதிகள் போல தேர்தல் வாக்கு அரசியல் செய்யாத ஒருவர் என்ற கருத்து சமூகத்தில் உண்டு. யாழ்ப்பாணத்தில் தோல்வியை சந்திக்காமல் தொடர்ந்து அவர் பாராளுமன்றம் செல்வது கூட மக்கள் ஆதரவின்றி சாத்தியமில்லை. ஈழப்போர், இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்று தமிழர் வரலாற்றில் முக்கிய விடயங்களின் சாட்சியும் அவர்தான். அப்படியான ஒருவர் நேரடியாகவே இப்படியான பிரச்சினைகளை ஆராய இறங்கியிருப்பதன் மூலம் புனிதப்பிரதேச அத்துமீறல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்ற புதிய நம்பிக்கை தமிழரிடத்தே பிறந்துள்ளது. தமிழரின் அந்த கனவை நனவாக்க வேண்டும் அமைச்சர் டக்ளஸ். அதற்கு தமிழர் அரசியல் பிரதிநிதிகள் அரசியல் வேறுபாடுகளைக் களைந்து டக்ளஸுக்கு ஆதரவை வழங்கவேண்டும். குறைந்தபட்சம் உதவிகளை செய்யாவிடினும், உபத்திரவங்களை செய்யாமலாவது இருந்து இப்படியான சிக்கல்களை மதிநுட்பமாகத் தீர்க்க உதவ வேண்டும். தமிழ்ச் சமூகம் அதனையே எதிர்பார்க்கிறது.

# செல்வத்துள் செல்வம்!...



- கிருங்கை சேதுபதி -

அண்மையில் ஒரு திருமண நிகழ்வுக்குச் சென்றிருந்தபோது, அப்பாவின் நண்பர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. இளம் வயதில் என்னை ஒரு பலகையின் மீதேற்றி, ஒலிவாங்கி முன் நின்று பேச வைத்துக் கேட்ட பெரியவர் அவர். பரஸ்பர நலன் விசாரிப்புகளுக்குப் பின்னர் பேச்சு, பேச்சைப் பற்றி அமைந்துவிட்டது.

"அந்த காலத்தில் கூட்டம் என்றால், பேச்சாளர்கள் வருவதற்கு முன்னரே கேட்பவர்கள் வந்து காத்துக் கொண்டிருப்பார்கள். இப்போது அப்படியா இருக்கிறது? பேச்சாளர்கள் வந்து வெகுநேரம், கூட்டம் வருவதற்குக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் இன்றைக்கு இருக்கிற இவ்வளவு வசதிகள் அன்றைக்கு இல்லை. ஏன், ஒலிபெருக்கி, அலங்கார மேடைகள் கூட இல்லாமல் பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் உயர்ந்த இடத்தில் நின்று கொண்டு பேச்சாளர்கள் பேச, மக்கள் கேட்கிற காலம் எல்லாம் இருந்தது'' என்று கூறி பழைய நினைவுகளில் மூழ்கினார் அவர்.

உண்மைதான். நமது பகுதிக்கு சிறந்த பேச்சாளர் ஒருவர் வருகிறார் என்றால், அவர் பேசும் ஊர்களுக்கெல்லாம் அவருக்கு முன்னரே போய்த் தொடர்ந்து கேட்பதும், கேட்டு வந்த பிறகு, கேட்க வாய்ப்புக் கிடைக்காத மற்றவர்களுக்கு அதை முடிந்த வரையில் அப்படியே எடுத்துச் சொல்வதும் வழக்கம். முடிந்த வரையில் அவர் போலக் குரலையும் ஆக்கிக் கொண்டு பேசிக்காட்டினால், பேச்சாளருக்குக் கிட்டிய மகிழ்ச்சியில் பாதி கேட்பவருக்கும் கிடைத்துவிடும். அந்த அளவிற்குப் பேச்சாளர்களுக்கு அப்போது பெறுமதி இருந்தது.

கேட்டுக் கேட்டுப் பழகிய அந்த மனிதருக்குள் ஊற்றுப்போல் அந்தப் பழைய நினைவுகள் வெளிப்படத் தொடங்கின. என் ஒருவனையே பெருங்கூட்டம் என்று நினைத்துக் கொண்டதுபோல, அந்த காலப் பேச்சாளர்கள் பெயர்களைச் சொல்லி, அவர்களின் சிறந்த கருத்துகளைச் சொல்லி, அதனால் ஏற்பட்ட அரசியல், கலை, இலக்கிய, ஆன்மிகத் தாக்கங்களை விளக்கும்போது, அவர் ஒருவரே நடமாடும் மேடைத்தமிழ்க் களஞ்சியமாகத் தெரிந்தார்.

அவர் மட்டுமா? அந்தக் காலத்தில் அவ்வாறு கேட்ட செவிச்செல்வர்கள் பலரும் அப்படித்தான் இருந்தார்கள். என் பள்ளிப் பருவத்தில், எங்கள் வீட்டுத் திண்ணையில் இருந்து கொண்டு இப்படி, கூட்டத்துக்குப் போனவர்கள் வந்து சொல்லச் சொல்லிக் கேட்பவர்களை நானும் பார்த்திருக்கிறேன் - கேட்டிருக்கிறேன். ஈ.வே.ரா. பெரியாரின் பகுத்தறிவு முழக்கமும் அதற்குப் பதில் சொல்லும் வகையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தந்த விளக்கங்களும் தோழர் ஜீவா, அண்ணா தொடங்கி பலரும் முழங்கிய அரசியல் பேச்சுகளை எடுத்துக் காட்டியும், வாரியார் சுவாமிகள் தரும் ஆன்மிக அறிவுரைகளைத் திரும்பச் சொல்லியும் அவை குறித்து விவாதிக்கிற பாங்கு இருக்கிறதே அற்புதம்.

அவர்கள் சொல்லியவற்றுள் உண்மை எது, புனைவு எது என்று கண்டுகொள்வதும் அதில் இருக்கும் அழகிய தமிழ்ச் சுவையை அனுபவிப்பதும் கற்றறிய இயலாத இலக்கிய வரிகளைச் சுவைபடச் சொல்லிய வண்ணம் செவிமடுத்துச் சிந்தை கொள்வதுமாக இருந்த காலம் அது.

திருக்குறளும் சிலப்பதிகாரமும் புறநானூறும் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுவதுடன், அயலகச் சிந்தனையாளர்களின் பெயர்களை நினைவுபடுத்துவதும் அப்போது நிகழ்ந்தது. கம்பன் கழகங்கள், காப்பிய மாந்தர்களைக் கம்பனின் துணையோடு, கண்முன்னே உலவவிட்டன. பெரியபுராணத்து நாயன்மார்கள் மீளவும் திருத்தொண்டு புரியத் தொடங்கிய காலகட்டமும் அதுவாக இருந்தது. புராண, இதிகாசக் கருத்துகள் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டன.

பகுத்தறிவுப் பாசறைகள் தொடங்கப்பட்ட அளவிற்கு, உழவாரத் திருக்கூட்டங்களும் அடியார் பேரவைகளும் உருவாகத் தொடங்கின. நூல் நிலையங்கள், படிப்பகங்கள் தெருவெங்கும் தோன்றின. இரு தரப்பினரும் சின்னஞ்சிறு பிரசுரங்களை அச்சிட்டு வழங்கியதன் மூலமாக வாசிப்பு அனுபவங்களையும் வளர்த்தனர். பொது ஊடகமாக, வானொலியும் பத்திரிகைகளுமே திகழ்ந்த காலத்தில் அவை வாரி வழங்கிய தரவுகளும் கலை, இலக்கியச் செல்வங்களும் கணக்கில்லாதவை.

செவிவழியாக வந்து சிந்தை நிறைத்த வானொலிச் செல்வங்களும் எழுத்து வழியாக வந்து இதயத்தை விசாலப்படுத்திய இதழியல் ஆக்கங்களும் மகத்துவமான கற்பனை வளத்தை மனிதர்க்கு வழங்கின. கனவுகளை வளர்த்தன. காவிய வாழ்வை ஆக்கிக் கொடுத்தன. கேளாரும் வேட்ப மொழிகின்ற நுட்பம் வளர்ந்தது. வாரந்தோறும் இதழ்களின் வழியே வெளிவந்து வளர்ந்த 'பொன்னியின் செல்வன்' புதினம், இன்றைக்கும் எழுத்தாளர் கல்கியையும் ஓவியர் மணியத்தையும் நினைவுபடுத்திக்கொண்டே இருக்கிறதே..!

வானொலி உரைகள் எழுத்துரைகளாகி நூல்களாக ஆக்கம் பெற்றன. அவை எழுதப் படிக்கத் தெரிந்த எளிய மக்களின் இதயங்களைச் செழுமைப்படுத்தின. குறைந்த விலையில் நிறைய நூல்கள் அச்சாக்கம் பெற்றன. அவை முறைப்படி வாசிப்புக்கும் நேசிப்புக்கும் உள்ளாக்கப்பட்டன.

அரங்கத் தமிழ் உரைகள் மாலைநேரப் பாடசாலை வகுப்பறைகளாகவே மலர்ந்தன. அவரவர் பக்க நியாயங்களை, வாத, தர்க்க முறைப்படி எடுத்துரைத்துப் பேசுகிற பேச்சாளர்கள் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் இருந்தார்கள். மேற்கோளிடும் ஒரு கருத்துக்கு ஆதரவாக இலக்கியத் தொடரை முன் வைக்கும் கருத்தாளரை மறுக்கும் மற்றொரு கருத்தாளர் - அதேபோல இன்னொரு மேற்கோளை அதே இலக்கியத்தில் இருந்து எடுத்துக் காட்டவும் செய்தார்.

தேவை கருதி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டப்பட்ட இலக்கிய வரிகள் இதய வரிகளாகி, காவிய உணர்வை, செவிமடுப்போர் சிந்தைகளில் நிறைத்தன. தம் சொந்த வாழ்வின் சிக்கல்களுக்கான தீர்வுகளை, இந்த உரைகளில் இருந்து தேர்ந்து கொள்ளவும் தெளிந்திருந்தனர். இராமனையும் சீதையையும் பரதனையும் குகனையும் மட்டுமின்றி, கூனியையும் கும்பகர்ணனையும் இன்னபிற பாத்திரங்களையும் தத்தம் நிகழ்கால வாழ்வில் அடையாளம் காணத் தெரிந்திருந்தனர்.

இராமனுக்குக்கு நிகராகவும் மேலாகவும் இராவணனை ஏற்றுப்போற்றுகிற மரபில் கம்பர் கலைவல்லாராக மிளிர்ந்தார். அசுரர்கள் புதிய கோணத்தில் இனங்காணப்பட்டனர். மரபியல் சார்ந்த கருத்தாக்கங்கள் மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டன.

இதிகாசக் காப்பியங்களுக்கு மாற்றாக சங்க இலக்கியச் சிந்தனைகளும் முன்வைக்கப்பட்டன. குறித்த நேரத்தில் தொடங்கி, குறித்த பொழுதுக்குள் வகுத்துக் கொண்ட உரையைச் செறிவுற நிகழ்த்தியவர்கள் அப்பேச்சுரைகளை, எழுத்துரைகளாகவும் தயாரித்தனர். அவை நூல்களாகவும் வெளிப்பட்டன. அவை அக்காலத்து உயரிய இலக்கிய விருதுகளையும் அவர்களுக்குப் பெற்றுத் தந்தன.

இசை, நாட்டிய அரங்குகளுக்கு நிகராகவும், அவற்றுக்கு மேலாகவும் இயற்றமிழாகிய உரைநடைத் தமிழுக்குக் களம் அமைத்தது அக்காலம். அரசியல் மேடைகளில் இலக்கிய நயமும் இலக்கிய மேடைகளில் அரசியல் நளினமும் அழகாக வெளிப்பட்டன. பகுத்தறிவைப் பறைசாற்றியவர்களின் உரைகளில் மனிதநேயமும் பக்தியைப் புலப்படுத்தியவர்களிடையே அறிவியல் மனப்பான்மையும் சிறப்பாக வெளிப்பட்டன.

அவரவர்களின் நிலைப்பாட்டில், உண்மைகள் உலாவரத் தொடங்கின. அவை முழு உண்மை இல்லை என்பதைச் செவிமடுத்தோர் நன்கறிந்திருந்தனர். பகுதி உண்மைகளைத் தொடர்ந்து செவிமடுத்து, முழு உண்மையை உள்வாங்கிக் கொள்ளும் நுட்பம் கேட்பாளர்களுக்கு இருந்தது. மெய்யாகவே அவர்கள் பொதுமக்களாக விளங்கினர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்ற வேகத்தில், மளமளவென்று தன்னரசை நிலைநிறுவ மேற்கொண்ட நேரத்தில், சுயம் கெடாமல், சமய, சமூகச் சீர்திருத்தங்களையும் செய்தாக வேண்டிய நெருக்கடியைச் சரியாகப் புரிந்துகொள்ளவும் செயற்படவும் மேடைகளே பெரிதும் துணைநின்றன. எழுத்துத் தமிழை விடவும் பேச்சுத் தமிழுக்கு இன்றியமையாத இடம் கிடைத்தது.

பண்டிதர்களின் முற்றங்களில் மெல்ல நடந்துகொண்டிருந்த தமிழணங்கு, தெருவெல்லாம் பவனி வரத் தொடங்கினாள். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'' என்ற மகாகவி பாரதியாரின் கட்டளை நடைமுறைக்கு வந்தது. பண்டைய இலக்கியங்களுக்கு நிகராக, பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரின் கவிதைகள் உரத்துப் பேசப்பட்டன.

ஏற்றுக்கொள்ள முடியாத இயக்கங்களின் முழக்கங்களையும் தமிழ்ச்சுவை கருதிக் கேட்டு மகிழ்ந்த இதயங்கள் அன்றைக்கு இருந்தன. எத்தனை விதமான எதிர்க்கருத்துகள் இருந்தாலும், கருத்தாளர்கள் எதிர்ப்படச் சந்தித்துக் கொள்ளும்போது நனிநாகரிகர்களாகவே அவர்கள் நடந்துகொண்டார்கள்.

பேச்சாளர்களைப் போலவே, கவிஞர்களுக்கான கவியரங்குகளும், எழுத்தாளர்களுக்கான உரையாடல் அரங்குகளும் மேடைத் தமிழுலகு நிர்மாணித்துத் தந்தது. சுவைஞர்கள் அவர்களினும் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள். எல்லார்க்கும் எல்லாச் செல்வமும் கிட்ட இயலாத காலத்தில் தலைச்செல்வமாக, இச்செவிச்செல்வம் கிட்டியதும், அதன் சுவையுணர்ந்து தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டவர்களும் அவர்கள். தற்காலமாக மலர்ந்த அக்காலத்தை இப்போது நினைக்க அதுவொரு பொற்காலமாக அவருக்குத் தெரிந்ததுபோலும். "அந்தக் காலம் இனிமேல் வருமா? தெரியவில்லை. வந்தால் நல்லது'' என்று பழைய நினைவுகளைக் கலைத்துக் கொண்டு அவர் எழுந்தார். கூடவே நானும் எழுந்தேன்.

செவிச் செல்வம் வளர்க்கும் சீலம் மீளவும் வரவேண்டும் என்பதற்காக, அரங்க அமைப்பாளர்களும், பொழிவாளர்களும் காலத் தேவைக்கேற்ப சிந்தித்துச் சிறப்பாகச் செயற்படுத்தினால் நன்றாக இருக்கும்.

(நன்றி - தினமணி)

## நக்கல் நமசிவாயம்

சாமான்கள் விலையேத்துறது, கரண்ட் பில்லை கூட்டுறது எண்டு அரசாங்கம் விடுக்கிற அறிவிப்புகளை பார்க்கும்போதே தெரியேல்லையா தேர்தல் இப்போதைக்கு வாறமாதிரி இல்லையெண்டு..!



## இன்றைய நாளில்..

- ✱ 1838 – தென்னாபிரிக்காவில் நத்தாலில் நூற்றுக்கணக்கான டச்சுக் குடியேறிகளை சூலு இனத்தவர்கள் கொன்றனர்.
- ✱ 1867 – சுயெஸ் கால்வாயூடாக முதலாவது கப்பல் சென்றது.
- ✱ 1881 – இலங்கையில் இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் மொத்த மக்கள் தொகை 27,59,738 ஆக இருந்தது. வட மாகாணத்தில் 302,500 ஆகவும் யாழ்ப்பாணத்தில் 40,057 ஆகவும் மக்கள் தொகை காணப்பட்டது.
- ✱ 1933 – 'நியூஸ்வீக்' முதலாவது இதழ் வெளிவந்தது.
- ✱ 1936 – சிறுவர்களுக்கான அதிமேதாவி மாயாவி முதற்தடவையாக வரைகதைகளில் தோன்றினார்.
- ✱ 1948 – காலியில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்று வெடித்ததில் 16 பேர் உயிரிழந்ததுடன், 25 பேர் காயமடைந்தனர்.
- ✱ 1959 – முதலாவது காலநிலை செயற்கைக்கோளான வான்கார்ட்-2 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ✱ 1965 – அப்பல்லோ-11 மூலம் நிலாவிற்கு மனிதனை அனுப்புவதற்கு முன்னோட்டமாக நிலாவில் தரையிறங்குவதற்கான இடத்தைப் படமெடுப்பதற்காக ரேஞ்சர்-8 விண்கலம் ஏவப்பட்டது.
- ✱ 1982 – இலங்கைக் கிரிக்கெட் அணி தனது முதலாவது டெஸ்ட் போட்டியை இங்கிலாந்துக்கு எதிராக கொழும்பு ஓவல் அரங்கில் விளையாடியது.
- ✱ 1990 – ஊடகவியலாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- ✱ 1996 – நாசாவின் டிஸ்கவரி திட்டம் ஆரம்பமானது. 433-ஈரோஸ் சிறுகோளில் தரையிறங்கும் நோக்கோடு நியர் சூமேக்கர் என்ற விண்கலம் ஏவப்பட்டது.

# நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்



நிர்மாணக் கைத்தொழிலுக்கு புத்துயிரளிக்கும் குழு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று முன்தினம் (15) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, இலங்கையில் நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவது தொடர்பில் இந்தக் குழு செயற்படுகிறது.

இலங்கையின் நிர்மாணத்துறையின் பிரச்சினைகளை முறையாகத் தீர்த்து, அதற்கு புத்துயிரளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சாகல ரத்நாயக்க சுட்டிக் காட்டினார்.

நிர்மாணத்துறைக்கு புத்துயிரளிக்கும் குழுவின் கீழ் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நிறைவேற்றுக் குழுவின் மூலம் நிர்மாணத் துறைக்கு புத்துயிர் வழங்கப்படவேண்டு மெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA), நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் தனியார்துறை பங்குதாரர்களையும் உள்ளடக்கியதாக இந்த நிறைவேற்றுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டது.

நிர்மாணத் துறையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், வங்கி வட்டி வீதங்களை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள், இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் சுங்க வரிகள், அரசாங்கத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான கொடுப்பனவு முறைமை என்பன தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நிர்மாணத்துறையில் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை கணக்கிட்டு எவ்வளவு காலத்திற்குள் கொடுப்பனவுகளை பூர்த்திசெய்வது என்பது தொடர்பில் உடன்பாடு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நிர்மாணத்துறையில் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகளால் முன்வைக்கப் பட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நிர்மாணத்துறை தொடர்பான நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# வாகனம் பழுதுபார்க்குமிடத்தில் தீ



தாவடி வன்னியசிங்கம் வீதியிலுள்ள வாகன வேலைத்தளம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வாகன பெயிண்டிங் மற்றும் வாகன வேலைத்தளம் எரிந்து நாசமாகியுள்ளதோடு, வேலைத்தளத்துக்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பட்டா ரக வாகனமும் முழுமையாக எரிந்துள்ளது.

வேலைத்தளத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு, தற்பொழுது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

# பேருவளை சீனன்கோட்டையில் புதிய இரத்தினக்கல் ஆய்வுகூடம்

**(பீ.எம்.முக்தார்)**

பேருவளை சீனன்கோட்டை பத்தை சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக சந்தைத் தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரத்தினக்கல் ஆய்வுகூடம் EG LAB (Esteem Gem Laboratory) கடந்த புதன்கிழமை (15) திறந்துவைக்கப்பட்டது.





நிறுவனத்தின் தலைவர் எம்.ரீ.எம்.ஹாரிஸ் ஹாஜியார் தலைமையில் திறந்து வைக்கப்பட்டதோடு, சீனன்கோட்டை பாஸிய்யா பெரியபள்ளிவாசல் இமாம் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி), முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி முஹம்மத் ரிபால் (தீனி), மௌலவி அஹமத் முபாரக் (மன்பஈ) ஆகியோர் துஆ பிரார்த்தனை நடத்தினர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க முன்னாள் தலைவர் கலாநிதி எம்.இஸட்.எம்.நிஸார் ஹாஜியர், EG LAB பணிப்பாளர்களான டாக்டர் மஷீக் மவ்பால், ஹம்தான் அஹமட் ஹாரிஸ் மற்றும் பியூடி ஜெம்ஸ் அதிபதி அல்ஹாஜ் அஹ்ஸர் ஸவாஹிர், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முன்னாள் தலைவர் ஏ.எஸ்.எம்.பவுஸி ஹாஜியார் உற்பட சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க முக்கியஸ்தர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு இரத்தினக்கல் வர்த்தகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்துடன் இந்த ஆய்வுகூடம் சிறப்பாக தனது சேவையை வழங்கி வருகிறது.

2003ஆம் ஆண்டு இந்த இரத்தினக்கல் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டதோடு, இரத்தினக்கல் ஆய்வு தொடர்பாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனமாக இந்த EG LAB திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுகூடத்தில் இரத்தினக்கல் ஆய்வு தொடர்பான பயிற்சிபெற்ற 14 பேர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை புஹாரித் தக்கியாவில் 144ஆவது புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ்

**(பேருவளை நிருபர்)**

வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியாவில் 144ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் பெரிய கந்தூரி வைபவம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல்-ஆலிமும் பாழில் அஷ்ஷெய்ஹ் காமில் அஷ்ஷெய்க் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தமாம் மஜ்லிஸுக்கு தலைமை வகிப்பார்.



வெள்ளிக்கிழமை தவிர 30 நாட்கள் ஹதீஸ் பராயணம் மற்றும் விளக்கவுரை இடம்பெற்று வருவதோடு, எதிர்வரும் 21ஆம் திகதி பகல் தமாம் பெரிய கந்தூரி இடம்பெறும்.

பெப்ரவரி 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் இலங்கை ரயில்வே திணைக்களம் வழமைபோல் கொழும்பு - பேருவளை மற்றும் காலி - பேருவளை இடையே விசேட ரயில் சேவைகளை நடத்தும். அத்தோடு கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில்களும் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும்.

20ஆம் திகதி இரவு மற்றும் 21ஆம் திகதி பகல் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த உலமாக்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள், முஸ்லிம்கள் பெருமளவில் பங்குபற்றும்.

பெண்கள் வருவது முற்றாக தடைசெய்யப் பட்டுள்ளது. பேருவளை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

# அன்னை ஆதிபராசக்தியின் அன்பு இல்லம் மத்துகமையில் திறந்துவைப்பு


























மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தியின் அன்புத் தொண்டர்களின் நிதி உதவியில் களுத்துறை மாவட்டத்தில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மகத்தான மக்கள் பணியில் 10ஆவது வீடு மத்துகமை, ஹோகன் மேற்பிரிவில் அமைக்கப்பட்டு நலிவுற்ற குடும்பத்தினருக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அகலவத்தை டார்டன்பீல்ட் பகுதியில் இயங்கிவரும் கணபதி அறநெறி பாடசாலையின் தலைமை ஒருங்கமைப்பாளர் சதாசிவம் உதயசாந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மத்துகமை பிரதேச செயலாளர் எல்.கே.மதுஹ சங்கல்ப மற்றும் களுத்துறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர் திருமதி தனலட்சுமி மாதவன் ஆகியோரால் புதிய வீடு உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டு பயனாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன், பயனாளர் குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் ஹோகன் மேற்பிரிவு கலைவாணி அறநெறி பாடசாலையின் பொறுப்பாளர்ராஜேந்திரன், அகலவத்தை கணபதி அறநெறி பாடசாலையின் இணைப்பாளர் தனராஜ், ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் மற்றும் மத்துகமை பிரதேச செயலக அதிகாரிகள், ஆன்மீகவாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோருடன் பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

**(படப்பிடிப்பு - கிஷோர்)**

# "சுத்தமான தமிழ்க் கலாசாரம் யாழ்ப்பாணத்தில்தான் உள்ளது"

## பேராசிரியர் சமில லியனகே தெரிவிப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சுத்தமான தமிழ்க் கலாசாரம் யாழ்ப்பாணத்திலேயே உள்ளது - என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் பேராசிரியருமான சமில லியனகே தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (14) யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தலைமையில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் வரும்போது எனது சொந்த அம்மா, அப்பாவை தேடி வருகின்ற உணர்வு ஏற்படும்.

தமிழர் கலாசாரம் மீது அளவு கடந்த விருப்பு கொண்டவன் நான். உலகமே வரவேற்ற தமிழர் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் உள்ளது.

சுத்தமான தமிழ்க் கலாசாரம் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக உலக மக்கள் உணர்கின்றனர். அது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

யாழ்ப்பாணத் தமிழ், காதில் தேன் ஊற்றுவது போன்று அழகாகவும் தெளிவாகவும் உள்ளது. ஆனால் தெற்கிலுள்ள தமிழர்கள் பேசும் தமிழ் யாழ்ப்பாணத் தமிழ் போன்று இருக்காது. நான் அடுத்தமுறை யாழ். வரும்போது உங்கள் தமிழில் அழகாக உரையாற்றுவேன்.

நீங்கள் இப்போது எதிர்கொள்ளவிருப்பது ஓர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை. ஆனால் மக்கள் தேசிய ரீதியாக ஒரு பொதுத் தேர்தலை எதிர்பார்க்கின்றனர்.

ஏனென்றால், இந்த நாடு பொருளாதார ரீதியாக பூஜ்ஜியத்திற்கு சென்றுவிட்டது. ஆகவே, நாட்டின் தலைமையை மாற்ற வேண்டிய தேவை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது – என்றார்.



யாழ். இந்திய துணைத் தூதரகம் மற்றும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் இணைந்து ஏற்பாடு செய்த கர்நாடக இசை பயிலரங்கம் யாழ். மத்திய கலாசார நிலையத்தில் இடம்பெற்றபோது இந்தியாவின் புகழ்பெற்ற கர்நாடக இசைக்கலைஞர் கலாநிதி அருந்ததி குழுவினருடன் இணைந்து வடமாகாணத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இசை ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (யாழ். நிருபர்)

# யாழ். மாநகர சபை அமர்வில் 'வைக்கோல் பட்டடை நாய்' எனக் கூறியவர் வெளியேற்றம்



(யாழ். நிருபர்)

சபையில் அநாகரிகமான சொற்பிரயோகத்தை செய்த மாநகர சபை உறுப்பினர் ஒருவர் வெளியேற்றப்பட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் அமர்வு நேற்று (16) காலை மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி, 'வைக்கோல் பட்டடை நாய்' போன்று சிலர் செயல்படுவதாக கூறியிருந்தார். இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

அதாவது குறித்த உறுப்பினர் சபை அமர்வில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என உறுப்பினர்கள் முதல்வரிடம் கேட்டுக்கொண்டனர்.

''நீங்கள் என்னை வெளியேற்ற வேண்டாம். நானே வெளியேறிச் செல்கிறேன்'' என உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி தெரிவித்துவிட்டு வெளியேறினார்.

குறித்த உறுப்பினரின் அநாகரிகமான சொற்பிரயோகம் பதிவு செய்யப்படும் எனவும், சபையின் வேண்டுகோளுக்கமைவாக அவர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்ற பதிவு குறிப்பிடப்படும் எனவும் முதல்வர் தெரிவித்தார்.

அத்தோடு குறித்த உறுப்பினருக்கு இந்த மாதத்துக்கான கொடுப்பனவும் இரத்துசெய்யப்படுகிறது எனவும், இந்த ஒரு மாதத்தில் சபையின் செயற்பாடுகளுக்கு அவர் அனுமதிக்கப்பட மாட்டார் எனவும் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# வேலைத்தளத்தில் உடல் சோர்வடைந்து வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

**வவுனியாவில் சம்பவம்**

(வவுனியா நிருபர்)

வவுனியாவில், வேலைத்தளத்தில் நின்றவர் உடல் சோர்வடைந்து வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (15) மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,



வவுனியா, உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பண்டாரிக்குளம் பகுதியில் பாரவூர்தி ஒன்றில் திருத்த வேலை செய்துள்ளார். அங்கு வேலை செய்துகொண்டிருந்தபோது தலை சுற்றுவதாக தனது குடும்பத்தினரை அழைத்து முச்சக்கரவண்டியில் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணத்திற்கான காரணம் தெரியவரவில்லை எனத் தெரிவித்துள்ள வைத்தியர்கள், உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே மரணத்திற்கான காரணத்தை கூற முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, உக்குளாங்குளம், 4ஆம் ஒழுங்கையில் வசிக்கும் 60 வயதுடைய முருகன் சந்திரலிங்கம் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பில் வவுனியா வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி உற்சவம்

திருக்கேதீச்சரப் பெருமானின் சிவராத்திரி உற்சவம் நாளை சனிக்கிழமை (18) காலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முதலாம் சாமப் பூசை இரவு 8 மணிக்கும் இரண்டாம் சாமப் பூசை இரவு 10.30 மணிக்கும் மூன்றாம் சாம இலிங்கோற்பவ பூசை நள்ளிரவு 12.15 மணிக்கும் நான்காம் சாமப் பூசை பின்னிரவு 3 மணிக்கும் நடைபெற்று தொடர்ந்து அதிகாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஞாயிறு அதிகாலை சுவாமி பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவார். சிவராத்திரியையொட்டி ஆலய வெளிவீதியில் அமைக்கப்படும் பிரம்மாண்ட அலங்கார மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இதில் தமிழக மற்றும் இலங்கைக் கலைஞர்களின் ஆன்மீக உரைகள், பண்ணிசைக் கச்சேரி முதலியன இடம்பெறவுள்ளன.

# இனவாத அரசியல்வாதிகளாலேயே நாட்டின் அபிவிருத்திக்கு பாதிப்பு

## மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் இராஜாராம் தெரிவிப்பு

(செ.திவாகரன்)



இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் உரிமைக்காக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை கொண்டுவரும் பொழுது சிங்கள இனவாதிகள் எதிர்க்கின்றார்கள். அவர்களுடன் நாட்டில் சமத்துவம், அஹிம்சை, இன மத ஒற்றுமை பற்றி போதிக்கும் பௌத்த மதகுருமார்களும் தமிழர்களின் உரிமைகள் என்று வரும்பொழுது அவர்களும் பாதையில் இறங்கி எதிர்ப்பு போராட்டங்கள் நடத்துகின்றனர். இந்த நாட்டில் இனங்களின் ஒற்றுமைக்கு ஒருசில இனவாத அரசியல்வாதிகளால் பிளவுகள் ஏற்படுத்துவதாலே நாட்டின் அபிவிருத்திகள் பாதிக்கப்படுகின்றன என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசியலயமைப்பின் 13ஆவது திருத்தத்தை அரசாங்கம் அமுல்படுத்த எடுத்த நடவடிக்கைக்கு பௌத்த மதகுருமார்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவதில் எந்தவித இலாபமோ நன்மையோ இல்லை. இந்த மதகுருமாரின் போராட்டம் நடவடிக்கை இந்த நாட்டில் வாழும் மக்களிடையே மேலும் பிளவை ஏற்படும்.

இந்த நாட்டில் மாகாண ரீதியில் மக்களின் குறைகளை தீர்ப்பதற்காகவே இந்த நாட்டில் 13ஆவது அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமே மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. 13ஆவது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப் பட்ட மாகாண சபைகள் மூலம் மாகாண ரீதியாக பல அபிவிருத்திகள் நடைபெற்றன.

இந்த 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என இந்தியாவும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. ஆனாலும் இந்த நாட்டிலுள்ள ஒரு சில இனவாத அரசியல்வாதிகள் பௌத்த மதருமார்களை தூண்டிவிட்டு 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என எதிர்ப்புகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஒற்றுமை, சமத்துவம், தர்மத்தை பற்றி பேசும் பௌத்த மத குருமார்களே நாட்டில் நிலவும் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக பாதையில் இறங்கி போராட்டம் நடத்துவதை பார்க்கும் பொழுது நாட்டில் எவ்வாறு மக்கள் ஒற்றுமையாக வாழ்வது? இன்று இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் வேட்பு மனுக்கள் பெற்று தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின் இப்பொழுது அந்த தேர்தலை கூட நடத்த முடியாமல் ஆட்சியாளர்கள் திண்டாடுகின்றார்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் பங்காளிக்கட்சியினரும் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ள இவ்வேளையில் தேர்தல் ஒத்திவைப்பதற்கான காரணத்தை அரசாங்கத்திடம் பங்காளிக் கட்சிகள் கேட்காமல் இருப்பது வெட்கி தலைகுனிய வேண்டும்.

எனவே, இந்த நாடு ஜனநாயக நாடு. ஜனநாயக ஆட்சி என்று கூறிய போதிலும் ஜனநாயகத்திற்கு இங்கு இடமில்லை என்றுதான் கூறவேண்டும். இந்த நாட்டில் என்று ஜனநாயக ஆட்சி நடைமுறைக்கு வருகின்றதோ அன்றுதான் இந்த நாடு பஞ்சத்திலிருந்து மீண்டு நாடு அபிவிருத்தியடைந்து மக்கள் சுபீட்சமாக வாழமுடியும் எனத் தெரிவித்தார்.






பதுளை தெல்பெத்த தோட்டத்தில் இயங்குகின்ற ஸ்ரீராம் பாலர் பாடசாலையின் பௌதீகவள குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கிளிநொச்சி செரண்டிப் சிறுவர் இல்லத்தினால் சுமார் பத்து இலட்சம் பெறுமதியான தளபாடங்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (என். மலர்வேந்தன்)

# பல்கலைக்கழக மோதலில் 09 மாணவர்களுக்கு காயம்

(கண்டி செய்தியாளர்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களுக்கிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 09 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இரவுவேளை இடம்பெற்ற இத்தாக்குதலில் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் முதலாம் வருட மாணவர்களை தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'தயாசாந்தி' விடுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது காயமடைந்த மாணவர்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களின் நிலைமை பாரதூரமானதாக இல்லை எனவும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பதுளையில் நிதி மோசடி செய்த மற்றுமொரு சந்தேக நபர் கைது

(என். மலர்வேந்தன்)

பதுளை பகுதியில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக பண மோசடியில் ஈடுபட்ட மேலும் ஒரு சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பகுதிகளில் உள்ள பெருந்தோட்ட இளைஞர்களை இலக்கு வைத்து வெளிநாடு அனுப்புவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டதாக பதுளை, பசறை, லுணுகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பாதிக்கப்பட்ட இளைஞர்களினால் புகாரளிக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது, பதுளை பொலிஸ் நிலையத்தில் இதுவரையில் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது சந்தேக நபர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், லுணுகலையைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரும் லுணுகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது குறித்த அதிபரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பசறை பொலிஸாரினால் 43 வயதுடைய லுணுகலை அடாவத்தைப் பகுதியை சேர்ந்த லுணுகலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் காவலாளியை நேற்று முன்தினம் (15) பசறை பொலிஸார் கைது செய்து பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பசறை, லுணுகலை, பதுளை ஆகிய பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பாதிக்கப்பட்டவர்களினால் பண மோசடி தொடர்பாக புகாரளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ சிப்பாய் கைது

(மஸ்கெலியா செய்தியாளர்)

பாடசாலை செல்லும் 8 வயது மற்றும் 10 வயதுடைய சிறுமியர் இருவரை தேயிலைத் தோட்டப் பகுதியில் வைத்து துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இராணுவ சிப்பாய் ஒருவர் நோர்வூட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து பொலிஸார் கூறுகையில், இராணுவ சிப்பாய் விடுறையில் வந்தபோது இவ்வாறு நடந்து கொள்ள முயன்றார் என அந்தப் பிள்ளைகளின் தந்தை நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்துள்ளார்.

சிறுமியர் இருவரையும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான இராணுவ சிப்பாய் கிளிநொச்சி பகுதியில் உள்ள இராணுவ முகாமில் பணிபுரிபவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



கண்டி, உதவி இந்தியத்தூதுவராலயம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச இந்தி மொழி தின நிகழ்வுகள் கண்டி சுயீஸ் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது. கண்டி உதவி இந்தியத்தூதுவர் டாக்டர் எஸ்.ஆதிரா தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் களனி பல்கலைக்கழக இந்தி மொழித்துறை பேராசிரியர் கலாநிதி உபுல் ரஞ்சித் ஹேவாவித்தாரண மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக அழகியற்கற்கைகள் மற்றும் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஈ.ஜீ.டபிள்யூ.பீ. குணசேன ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (படப்பிடிப்பு: கண்டி செய்தியாளர்)

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு நான்கு அரச நிறுவனங்கள் ஆறு கோடி ரூபா நிலுவை




பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் அனுமதியின்றி அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், அதிர்ஷ்ட இலாபச் சீட்டை அச்சடிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை 49 சதத்திலிருந்து 44 சதமாகக் குறைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டதால், 2021ஆம் ஆண்டு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களத்தின் தணிக்கை அறிக்கை தெரிவிக்கிறது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய 75 கோடி ரூபாவுக்கு மேல் பல ஆண்டுகளாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் பெறவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நான்கு அரச நிறுவனங்களிடமிருந்து அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு ஆறு கோடி ரூபாவுக்கு மேல் நிலுவையில் உள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

கல்வி அமைச்சு, கல்வி வெளியீடுகள் திணைக்களம், தேசிய லொத்தர் சபை மற்றும் தேசிய காகித நிறுவனம் என்பன ஐந்து வருடங்களுக்கும் மேலாக நிலுவைத் தொகையை செலுத்தாத நிறுவனங்களில் உள்ளடங்குவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

இந்தத் தகவல் 31 டிசம்பர் 2021 அன்று மாநில அச்சகக் கூட்டுத்தாபனம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.




## Teachers

**Institution:** Readway International College of Education
***Email:*** *readwaymanagement@gmail.com*

## Receptionist (Female)

**Company:** Winrose Property Developers PVT Ltd.
**Location:** Kurunegala
***Email:*** *hr@winroseproperty.lk*

## Social Media & Marketing Executive

**Company:** Ecom Services Lanka PVT Ltd
***Email:*** *hr@ecom.services*

## Librarian

**Institution:** The Bandaranayaike Centre for International Studies
***Email:*** *careers@bmich.com*

## Customs Data Entry Operator / Sales Executive / Wharf Executive

**Company:** Skyline Logistics PVT Ltd
***Email:*** *skylinelogisticscolombo@hotmail.com*

## Graphic Designer

**Institution:** British Way English Academy
**Location:** Nittambuwa
***Email:*** *vacancy.britishway@gmail.com*

## Intern – Human Resources

**Company:** V S Information System PVT Ltd
**Address:** Head of Human Resources, V S Information System PVT Ltd, 07, Suleiman Terrace, Colombo 05.

## Digital Marketing Executive

**Company:** eBeyonds
***Email:*** *jobs@ebeyonds.com*

## Data Entry Operators

**Company:** TR Associates
***Email:*** *mkncorporates@gmail.com*

## Sales Executives

**Company:** Eureka Australian Migration Experts
***Email:*** *careers.eureka@gmail.com*

## Plant Manager

**Company:** Adamjee Lukmanjee Group of Companies
**Location:** Kurunegala
***Email:*** *careers@adamjeelukmanjee.com*

## Assistant Manager

**Company:** Nrich Care
***Email:*** *info@nrichcares.com*

# மின்கட்டணம் – எரிவாயு விலை உயர்வால் பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிக்கும் சாத்தியம்



மின்கட்டணம் அதிகளவில் அதிகரிப்பதால் பேக்கரி தொழிலில் ஈடுபடுவோர் பாரியளவில் பாதிக்கப்படுமென தென்மாகாண சிறு மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரிகள் சங்கத்தின் தலைவர் கமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்கட்டணம் அதிகளவில் அதிகரிப்பதால் பேக்கரி உணவு உற்பத்தியிலிருந்து சந்தைப் படுத்தல் வரை இத்தொழில் கடுமையாக பாதிக்கப்படும்.

பேக்கரி தொழிலுக்கும் பொதுமக்களுக்கும் மின்சாரம் இன்றியமையாதது. இப்படி மின்சாரம் அதிகரிக்கும்போது, பேக்கரி தொழிலில் மாவு பிசையும் இடத்திலிருந்து ரொட்டி சுடப்பட்டு, உணவு தயாரித்து, சந்தையில் விநியோகிக்கப்படும்வரை மின்சாரம் தேவைப்படுகிறது.

பேக்கரி உற்பத்தி மற்றும் விற்பனைக்கு 100% மின்சாரம் தேவை. இதனால் பேக்கரி தொழிலை எப்படி தொடர முடியும்? சமீப நாட்களாக எரிவாயு விலை இரகசியமாக உயர்த்தப்பட்டு வருகிறது.

இந்தச் சுமையை நுகர்வோர் தாங்க முடியாததால், பேக்கரி உணவின் விலை உயர்த்தப் படவில்லை. மின்கட்டணம் தாங்கமுடியாமல் உயர்த்தப்படும்போது எப்படி இந்தத் தொழிலை தொடரமுடியும். வாடிக்கையாளர் விரும்பும் உணவை எவ்வாறு தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியும்?

இதன் காரணமாக விருப்பமில்லாமல் பேக்கரி உணவு வகைகளின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என கமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

# வெலிகமவில் 10 வயது மாணவியை வன்புணர்வுக்குட்படுத்திய நால்வர் கைது

வெலிகமவில் பத்து வயது பாடசாலை மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்திய நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று முன்தினம் (15) கைதுசெய்துள்ளனர்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பாடசாலை மாணவி கடந்த வெள்ளிக்கிழமை (10) மேலதிக வகுப்பிற்குச் சென்றுகொண்டிருந்தபோது, சந்தேகநபர்களால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவியை துஷ்பிரயோகம் செய்ததுடன், சந்தேகநபர்கள் அவருக்கு கொலை மிரட்டலும் விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண் தனது பிறப்புறுப்பில் ஏற்பட்ட காயங்கள் குறித்து தனது தாயிடம் தெரிவித்ததையடுத்து, தாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

20 வயதுடைய நான்கு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் (15) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாணவி பரிசோதனைக்காக மாத்தறை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாநகர சபைக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தாவிடில் 2023 வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதியில்லை

## மாதாந்த அமர்வில் நேற்றுத் தீர்மானம்



(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழில் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் யாழ். மாநகர சபைக்கு வழங்கவேண்டியுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று யாழ். மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்றுக் காலை (16) 10 மணியளவில், முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை நடை பெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இந்த விவாத்தின்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுமுதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி மற்றும் இதர கட்டணமாக சுமார் 39 இலட்ச ரூபா செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில், 2023ஆம் ஆண்டு கண்காட்சியை நடத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலுவையைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகள் எதனையும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கஞ்சா – கசிப்புடன் இருவர் கைது

பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வசாவிளான் பகுதியில் 15 லீற்றர் கசிப்புடன் 45 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வீதியால் கசிப்பினைக் கொண்டுசென்றவேளை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டார். அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகிரி பகுதியில் 250 கிராம் கஞ்சாவுடன் 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் ஏழாலை பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனுமதிப்பத்திரமின்றி தேக்கு மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட இருவர் வெல்லவாயவில் கைது

(கெலும் குணதிலக்க)

அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை லொறியொன்றில் ஏற்றிச்சென்ற சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் (15) இரவு வெல்லவாய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெல்லவாய பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.


ஹந்தபனகல அணைக்கட்டுக்கு அருகில் கைப்பற்றப்பட்ட லொறியில் பல்வேறு அளவுடைய பதினாறு தேக்கு மரக்குற்றிகள் இருந்ததாகவும், வெல்லவாய நகரிலுள்ள மரம் அறுக்கும் ஆலைக்கு அவை கொண்டுவரப்படுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தேக்கு மரக் கையிருப்பு சுமார் மூன்று இலட்ச ரூபா பெறுமதியானவை என்பதுடன், கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவர் லொறியின் உரிமையாளர் என்றும் மற்றையவர் லொறியின் சாரதி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

# இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரிக்கை

## காரைநகர் பிரதேச சபை தவிசாளர் யாழ். இந்திய துணைத் தூதுவருக்கு கடிதம்




இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு யாழ். இந்திய துணைத் தூதுவருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், காரைநகர் பகுதி மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டினை வழங்குமாறு கோரி, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரனால் யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது,

காரைநகர் கடற்பிரதேசத்தில் கடந்த வாரம் 3 மீனவர்களின் 11 இலட்ச ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டு முழுமையாக சேதப்படுத் தப்பட்டிருக்கின்றன.

இந்தச் சம்பவத்திற்கு இந்திய மீனவர்கள் பொறுப்பாளிகள் என பாதிக்கப்பட்ட மீனவர் களும் கடற்றொழிலாளர் சங்கத் தலைவரும் தெரிவிக் கின்றார்கள்.

இந்திய தமிழக உறவுகளுக்கும் எமக்கும் உள்ள புரிந்துணர்விலும், உறவிலும் இது விரிசலை ஏற்படுத்துவதால் இது சம்பந்தமாக உரியவர்களிடம் தெரிவித்து தீர்வை காணுமாறும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.






புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின், புத்தளம் தள வைத்தியசாலைக்கு தனது சொந்த நிதியிலிருந்து ஒரு தொகை மருந்துப் பொருட்களை நேற்று (16) வைத்திய அதிகாரி சுமித்திடம் கையளித்தார்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# Galaxy S23 மற்றும் S23 Ultraவை இலங்கையில் அறிமுகப்படுத்தும் Samsung SriLanka






Samsung Electronics SriLanka ஆனது Galaxy S23 Ultra மற்றும் Galaxy S23ஐ பெப்ரவரி 15ஆம் திகதி Marriott Colomboஇன் Countryyardஇல் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பெருமையுடன் வெளியிட்டது. Samsung Galaxyயின் ultimate premium phone அனுபவத்தின் புதியதோர் சகாப்தத்தை இது குறிக்கிறது. Samsung Galaxyஇன் epic cameraஆனது அதன் பாவனையாளர்களுக்கு அவர்களின் படைப்பாற்றலை ஆராய – அதாவது, மாற்றங்களுக்கு இட்டுச் செல்லும் AI உடனான உண்மையான cinematic Nightography videoக்களைப் படம்பிடிப்பது போன்ற இன்னும் அதிக வாய்ப்புகளை அளிக்கிறது. Galaxyக்கான Snapdragon 8 Gen Mobile Platformஆனது அற்புதமான AI ஊடாக future-ready mobile gaming அம்சம் தொடக்கம் உலகின் அதிவேக mobile graphics மூலம் சக்திவாய்ந்த game play என மிகச் சிறப்பான அனுபவங்களை உங்களுக்கென அள்ளி வழங்கப்போகிறது. Galaxy S23 Ultra உடன் கிடைக்கும் உட்பொருத்தப்பட்ட SPen பற்றி அதன் பல நீண்டகாலப் பாவனையாளர்களுக்கு நன்கு தெரியும், அதுமட்டுமல்லாது Samsung Galaxyஇன் அதிக வாய்ப்புகளை வழங்கும் love offers மற்றும் notetaking அம்சம், அத்தோடு பொழுதுபோக்கு என பலவற்றையும் அது அள்ளி வழங்குகிறது. அனைத்து Galaxy S23 seriesகளிலும், புத்தாக்கம் பெற்ற அதன் நவீன தரமும், எம்மை தன்வசம் ஈர்க்கக்கூடிய அதன் வடிவமைப்பும் பிரமாதமானவை. அத்தோடுகூட மற்றைய Samsung Galaxy Smartphoneகளைக் காட்டிலும் Galaxy S23ஆனது recycle செய்யப்பட்ட பொருட்களைக்கொண்டு அதன் கூடுதலான பாகங்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டிருப்பதானது Samsung நிறுவனத்தின் பேண்தகமையும் அதன் அர்ப்பணிப்பும் மென்மேலும் மேம்பட்டிருக்கிறது என்பதற்கு சான்றாகும்.

Galaxy S23 Ultraஆனது எந்த வகைப் புகைப்படக் கலைஞர்களுக்கும் படப்பிடிப்பானது தனித்துவமானதாகவும் இலகுவானதாகவும் அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய எந்த Lighting Conditionகளுக்கும் தன்னை ஈடுகொடுக்கும் வடிவமைப்பைக் கொண்டுள்ளதோடு அனைத்து விபரங்களையும் வழங்கும் வகையிலும் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட Nightography திறன்களில் ஏற்படக்கூடிய மாற்றமானது GalaxyS தொடர் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் தரத்தினையே பல்வேறு வித்தியாசப்பட்ட சுற்றுப்புற சூழ்நிலைகளிலும் மேம்படுத்துகிறது. ஒரு இசை நிகழ்ச்சியில் மனதிற்குப் பிடித்த பாடலை படமாக்குதலோ அல்லது aquarium ஒன்றில் ஒரு selfieயை எடுப்பதோ அல்லது இரவு உணவுவேளை ஒன்றின்போது நண்பர்களோடு groupshotகளை எடுப்பதோ என எதுவாக இருப்பினும் அதனை எடுக்கும் ஒருவர் மிகத் தெளிவான படங்களையும் வீடியோக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

Samsung Galaxyஇல், Galazy S23 Ultraஆனது ஒரு புதிய 200MP Adaptive Pixel Sensonஐ தன்னகத்தே கொண்டதாக அமைந்திருக்கிறது. இது அற்புதமான மறக்க முடியாத் தருணங்களை மனதை வியக்க வைக்கும் துல்லியத்துடன் படம்பிடிக்கிறது. மேலும் ஒரே நேரத்தில் 5 எனும் வகையில், multiple levelகளைக்கொண்ட high-resolution செயற்பாட்டை ஆதரிக்க இது pixel binning தொழிற்பாட்டைப் பயன்படுத்துகிறது. மேலும் selfie cameraக்கள் முன்னெப்போதையும் விட இன்று நாம் எவ்வாறு தொடர்புகொள்கிறோம் என்பதில் பாரிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது, Galaxy S23 Seriesஆனது சிறப்பான front-facing படங்கள் மற்றும் videoக்களைப் பெற்றுக்கொள்ள 30fps இலிருந்து 60fps வரையில் இயங்கக் கூடிய வேகமான autofocus மற்றும் எங்களின் முதன்முதலான Super HDR selfie கெமராவை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது.

இலங்கையில், Samsungஆனது தொடர்ந்து மூன்று வருடங்களாக No.1 Smartphone Brand ஆக மிகவும் விரும்பப்படும் பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என Brand Finance Lanka வின் மதிப்பாய்வு மூலம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில், samsungஇன் customer base ஆனது அனைத்து வயதினர் மத்தியிலும், குறிப்பாக Gen Z மற்றும் Millennial பிரிவிலும் பரவியுள்ளது.

# ஆசிய தொழில்நுட்ப சிறப்பு விருதுகள் 2022இல் SLT-MOBITEL கௌரவிப்பு




புத்தாக்கமான புரோட்பான்ட் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியான ஸ்தானத்தை மீள உறுதிசெய்யும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITELக்கு ஆசிய தொழில்நுட்ப சிறப்பு விருதுகள் 2022 நிகழ்வில், பெருமைக்குரிய "வலையமைப்பு மற்றும் புரோட்பான்ட் - தொலைத்தொடர்பாடல்கள் தொழில்நுட்ப சிறப்பு விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. SLT-MOBITELஇனால் LTE 850MHz புரோட்பான்ட் தீர்வை புத்தாக்கமான வகையில் பயன்படுத்தி நாட்டின் பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கும் பரந்தளவு வலையமைப்பை வழங்கியிருந்தமையை கௌரவிக்கும் வகையில் இந்த உயர் விருது வழங்கப்பட்டிருந்தது.

தேசத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் டிஜிட்டல் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சிறந்த கிராமிய இணைப்புத்திறனைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, SLT-MOBITELஇன் புத்தாக்கமான LTE 850MHz வலையமைப்பு நாடு முழுவதிலும் கிராமிய வலையமைப்பு இணைப்புத் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு இலங்கையருக்கும் SLT-MOBITELஇன் Sub-1GHz 850MHz LTE வலையமைப்பின் அனுகூலத்தை அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த பிரயாணக் கட்டுப்பாடுகளுடனான காலப்பகுதியில், அனைவருக்கும் புரோட்பான்ட் இணைப்பு முக்கிய தேவையாக அமைந்திருந்த காலப்பகுதியில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், SLT-MOBITELஇன் LTE 850MHz செலவுச் சிக்கனமாக புரோட்பான்ட் சேவைகளினூடாக கல்வி, பணி, சுகாதாரப் பராமரிப்பு, தேசிய அவசர நிலைகள் போன்றவற்றில் கிராமிய சமூகங்களை மேம்படுத்துவதற்கு பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டு, அச்சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் புரோட்பான்ட் ஆகியவற்றை சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

5G, Metaverse, AI, Big Data மற்றும் பல அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களுக்கு இலங்கையை வழிநடத்தும் வகையில், SLT-MOBITELஇனால் தொடர்ந்தும் வலையமைப்பு உட்கட்டமைப்புகள் விரிவாக்கத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேசத்தை அடுத்தகட்ட டிஜிட்டல் முன்னேற்றத்தை நோக்கி கொண்டுசெல்லும் பணிகளும் இடம்பெறுகின்றன.

# Unlimited சலுகையான ரூ.888 Freedom Plusஐ அறிமுகம் செய்யும் Airtel




தனது வாடிக்கையாளர்களுக்கு பணத்திற்கான பெறுமதியை தொடர்ந்து வழங்குவோம் என்ற அதன் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், Airtel SriLanka, இலங்கை இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான 6 சமூக ஊடக வலையமைப்புகளுக்கு அதிக பெறுமதி, சுதந்திரம் மற்றும் வரையறையற்ற அணுகலை வழங்கும் அதன் சமீபத்திய முற்கொடுப்பனவு Unlimited Freedom Packsகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Freedom Unlimited Pack விலை ரூ.888 மற்றும் வாடிக்கையாளர்களுக்கு TikTok, Instagram, Facebook, YouTube, Messenger மற்றும் WhatsApp போன்ற சமூக ஊடக பயன்பாடுகளுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குகிறது.

30GB Data (1GB/Day), வேறு எந்த நெட்வொர்க்குக்கும் வரையறையற்ற அழைப்புகள், 1,000 Airtel-Airtel SMSகள் மற்றும் 30 நாட்களுக்கு ஏனைய நெட்வொர்க்குகளுக்கு 50 SMSகள் உட்பட எயார்டெல்லின் பிரபலமான Freedom Packageகளின் அனைத்து சலுகைகளுடன் இந்த Package அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த Airtel Sri Lankaவின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ் சந்திரா, எங்கள் பாவனையாளர்களுக்கு பணத்திற்கு அதிக மதிப்பை வழங்குவதற்கான புத்தாக்கமான வழிகளைக் கண்டறிய எயார்டெல் குழு தொடர்ந்து கடினமாக உழைத்து வருகிறது. எங்களின் ரூ.888 Freedom Plus Packageஐ அறிமுகப்படுத்துவதும், சமூக ஊடக வலையமைப்புகளுக்கான பரந்த அணுகலை செயல்படுத்துவதும் எங்கள் மதிப்பு அடிப்படையிலான, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைக்கு மற்றொரு வலுவான சான்றாகும் என தெரிவித்தார்.

# ICTA தரத்தை மேம்படுத்தும் தனது பங்களிப்பிற்காகக் கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்ஷூரன்ஸ்



லைட்டினிங் டிஜிட்டல் தேசிய மன்றத்தில் இலங்கைப் பாடசாலை மாணவர்களின் ICTA தரத்தை மேம்படுத்தும் தனது பங்களிப்பிற்காக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ள இலங்கையின் ஒரேயொரு காப்புறுதி வழங்குநர் என்ற பெருமையினை AIA தனதாக்கியிருக்கின்றது. இலங்கையில் ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக வேகமான மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் மாற்றத்தை ஆதரித்து இலங்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு உதவுவதற்காக AIA இன்ஷூரன்ஸ் தனது பெறுமதியான உதவிகளை வழங்கியிருக்கின்றது. இந்த வகையில், டிஜிட்டல் கல்வியில் விரைவான மாற்றத்தின் மூலம் இலங்கையர்களின் டிஜிட்டல் நல்வாழ்வை மேம்படுத்தவும் தகவல் தொழில்நுட்பத் துறையை வலுப்படுத்தி முன்னேற்றும் இளைஞர்களை வலுவூட்டவும் நிறுவனம் மடிக்கணினிகள் மற்றும் ஐபேட்களை வழங்கியிருந்தது. உண்மையில் இப்பங்களிப்பு பெரிதும் பாராட்டப்பட்டுள்ளதுடன், நாட்டின் திறன் மேம்பாட்டு முயற்சிகளின் வெற்றியை உறுதிசெய்தும் உள்ளது. இந்த மன்றத்தின் திட்டத் தலைமையாக AIA பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுடன், நிறுவனத்தின் பிரதான தொழில்நுட்ப அதிகாரி உமேஷி டீ பொன்சேகா மற்றும் வியாபார கையகப்படுத்தல் மற்றும் அழைப்பு மையத்தின் சிரேஷ்ட முகாமையாளர் சுரேனி டீ அல்விஸ் ஆகியோர் AIA இன் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர்.

# STEM கல்வியை ஊக்குவிப்பதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்துள்ள கொமர்ஷல் வங்கி



வங்கியின் விஞ்ஞான, தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித கல்வியை (Science, Technology, Engineering and Mathematics – STEM) ஊக்குவிக்கும் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் கொமர்ஷல் வங்கி, தேசிய விஞ்ஞான மன்றத்துடன் (NSF) இணைந்துள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. மேலும், இலங்கையில் இக் கல்வி முறையில் பின்தங்கியுள்ள பாடசாலைகளை தெரிவு செய்து இந்தக் கல்வித் திட்டத்தை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டம், நாடு முழுவதும் டிஜிட்டல் கல்வி முறையை மேம்படுத்தும் வகையில் கொமர்ஷல் வங்கியினால் 100 பாடசாலைகளுக்கு STEM வகுப்பறைகளை நிர்மாணித்து ஓராண்டு பூர்த்தியான நிலையில் இத்திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. இது சம்பந்தமாக, MoU உடன் NSF செய்துக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வங்கியின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியத்தால் (CSR), STEM திட்டத்தை அறிமுகம் செய்வதற்கான பாடசாலைகளின் பெயர் விபரங்களை சமர்ப்பித்து, குறிப்பிட்ட பாடசாலைகளில் STEM கல்வி முறை வசதிகளை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொண்டு தேவையான சகல வசதிகளையும் கொமர்ஷல் வங்கியினால் வழங்கப்படுகிறது.

# இலங்கை குழந்தைநல மருத்துவர் கல்வியகத்துடன் ஹேமாஸ் கைகோர்ப்பு





ஹேமாஸ் குழுமத்தின் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மொரிசன்ஸ் லிமிடெட் ஆகியன இலங்கை குழந்தைநல வைத்தியக் கல்லூரியுடன் கைகோர்த்து, Feed a Child சமூக நலன்புரித் திட்டத்தினூடாக மந்தபோசாக்கு நிலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. இளம்பிள்ளைகள் எதிர்நோக்கியுள்ள உணவு பணவீக்கம் அதிகரித்துச் செல்வதால் மோசமான உணவு பழக்க முறைகள் இடம்பெறும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனுராதபுர மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளின் 150 குடும்பங்களுக்கு ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை உலர் உணவுப் பொதிகளை ஆறு மாத காலப்பகுதிக்கு விநியோகிப்பதற்கு ஹேமாஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. ஹேமாஸ் குழுமம், குடும்ப சுகாதார பணியகம் மற்றும் இதர கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளும் இந்தத் திட்டத்துடன் இணைந்துகொள்ளும். பல இலங்கை குடும்பங்கள் தினசரி வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ள போராடிவரும் நிலையில், இலங்கையின் இளம்பிள்ளைகளின் மீது ஹேமாஸ் கவனம் செலுத்த ஆரம்பித்திருந்தது.

இந்த உலர் உணவுப் பொதிகள் விநியோகத்துக்கு மேலதிகமாக இந்தக் குடும்பங்களுக்கு முறையான போசாக்குக் கல்வியை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக, வளரும் பிள்ளைகள் மத்தியில் போசாக்கின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை இலங்கை குழந்தைநல வைத்திய கல்வியகம் மேற்பார்வை செய்து, நேர்த்தியான தாக்கங்கள் ஏற்படுத்தப்படுவதை உறுதிசெய்யும். இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமான பூர்த்திசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஆரோக்கியமான சிறந்த வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு குடும்பங்களுக்கு தொடர்ந்தும் வலுவூட்ட ஹேமாஸ் முன்வந்துள்ளது.

# களனியில் MediHelp Hospital Group

மலிவு விலையில் ஆரம்ப சிகிச்சைகளை வழங்குவதில் இலங்கையின் சுகாதாரத் துறையில் முன்னோடி மற்றும் மிகப்பெரிய மருத்துவமனை சங்கிலியான MediHelp Hospitals குழுமம், கம்பஹா மாவட்டத்திற்குள் பிரவேசித்து கம்பஹா மாவட்டத்திற்குள் நுழைந்து நாடு முழுவதும் தனது சேவைகளை விரிவுபடுத்துவதற்காக தனது அண்மையில் மருத்துவமனை கிளையை களனி நகரில் அண்மையில் திறந்துள்ளது.

MediHelp Hospitals குழுமத்தின் தலைவர் லெஸ்லி விஜேசிறிவர்தன, MediHelp ஆய்வுகூட குழுமத்தின் பணிப்பாளர் சுனந்த விஜேசிறிவர்தன, களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஜானகி ஹெவாவிசெந்தி, களுத்துறை பிராந்திய சுகாதார அபிவிருத்தி மாவட்ட சேவைகள் பணிப்பாளர் Dr. யூ.ஐ.ரத்நாயக்க, MediHelp Hospitals குழுமத்தின் மருத்துவ சேவைகள் பணிப்பாளர் Dr. சரித விஜேசிறி ஆகியோர் புதிய களனி வைத்தியசாலையின் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர்.



த

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk

thamilanbusiness@gmail.com

## சிங்கர் ஸ்ரீலங்கா அறிமுகப்படுத்தும் SINGER RED நம்பிக்கை அங்கத்துவத் திட்டம்




சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி நிறுவனம், சமீபத்தில் தனது புதிய Singer RED நம்பிக்கை அங்கத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், சிங்கரில் கொள்முதல் செய்யும் அனைவருக்கும் இத்திட்டம் கிடைக்கப்பெறும். சிங்கர் தற்போது 2 மில்லியனுக்கும் அதிகமான விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ளது.

Singer RED நம்பிக்கை அங்கத்துவத் திட்டத்தின் மூலமாக வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு கொள்முதலின்போதும் RED புள்ளிகளை ஈட்டுவதுடன், அவர்கள் இத்திட்டத்தின் அங்கத்தவராக மாறுவதற்கும் வழிவகுக்கிறது. வாடிக்கையாளர் ஒருவர் 1,000 புள்ளிகளை ஈட்டிக்கொள்ளும் பட்சத்தில் அவர் பிரத்தியேக சலுகைகள் மற்றும் தனிப் பயனாக்கப்பட்ட வழங்கல்களை அனுபவிக்க முடியும்.

சிங்கர் மெகா காட்சியறையில் அல்லது www.singer.lk இணையத்தளத்தின் மூலமான கொள்வனவுகளின்போது ஒவ்வொரு ரூபா 200 தொகைக்கும் ஒரு RED புள்ளியை ஈட்டிக்கொள்ள முடியும். மேலும், வாடிக்கையாளர்கள் Singer Express Pay Counter மையங்கள் வழியாக பயன்பாட்டு கட்டணப் பட்டியல் மற்றும் கடனட்டை கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை செலுத்தும்போது RED புள்ளிகளை ஈட்ட முடியும். வாடிக்கையாளர்கள் இத்திட்டங்களின் ஒவ்வொரு அடுக்குகளையும் தாண்டி அடுத்த கட்டத்திற்கு மேலே செல்லும்போது இன்னும் கூடுதலான RED புள்ளிகளைப் பெறலாம். அவர்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபா100 தொகைக்கும் அவர்கள் ஒரு RED புள்ளியைப் பெறலாம்.

ஈட்டியுள்ள RED புள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வாடிக்கையாளர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். Deluxe பிரிவுக்கு 1000 முதல் 2999 RED புள்ளிகளும், Premier பிரிவுக்கு 3000 முதல் 5999 வரையான RED புள்ளிகளும் மற்றும் VIP பிரிவுக்கு 6000 RED புள்ளிகளுக்கு மேலும் ஈட்ட வேண்டும்.

## புதிதாக பிரசவமான குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி 75 வருட சுதந்திரத்தைக் கொண்டாடிய மக்கள் வங்கி







மக்கள் வங்கி இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திரத்தை தனது தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஓர் எளிமையான நிகழ்வில் கொண்டாடியதுடன், அதைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு சுதந்திர தினத்தன்றும் ஆரம்பிக்கப்படும் மக்கள் வங்கியின் 'சுதந்திரத்தின் பிறப்பு' (Birth of Freedom) நிகழ்ச்சித்திட்டம் இந்த வருடமும் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கருப்பொருளின் கீழ், பெப்ரவரி 1ஆம் திகதிக்கும் 14ஆம் திகதிக்கும் இடையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபா 2,000 பெறுமதியான 'இசுரு உதான' சான்றிதழை அன்பளிப்பாக வழங்குகிறது. பரிசுச் சான்றிதழைப் பயன்படுத்தி எந்த மக்கள் வங்கிக் கிளையிலும் பெற்றோர்கள் 'இசுரு உதான' சிறுவர் சேமிப்புக் கணக்கைத் திறக்கலாம். மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் 'இசுரு உதான' பரிசு வவுச்சர்கள் மற்றும் பிற பரிசுகளை பொரளையிலுள்ள காசல் வீதி மகப்பேறு மருத்துவமனை மற்றும் டி சொய்சா மகளிர் வைத்தியசாலையில் அடையாளமாக வழங்கினர்.

## OPPO A Seriesஇன் OPPO A17 புதிய தொலைபேசி அறிமுகம்




OPPO உடன் அபான்ஸ் இணைந்து OPPO A Series அணிவகுப்பின் புதிய தயாரிப்பான OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை விற்பனை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிமுக நிகழ்வு பெப்ரவரி 01ஆம் திகதி Courtyard by Marriott Colombo ஹோட்டலில் நடைபெற்றது. அதேபோல் இத்தருணத்தில் OPPOவின் இலங்கைக்கான தேசிய விநியோகஸ்தராக அபான்ஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டது இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும். Abans விநியோகிக்கும் புதிய A17 Series OPPO ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளில் 50MP பிரதான கெமரா, நீடித்துழைக்கும் பேட்டரி, ColorOS 12.1 Operating System ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியில் 50MP பிரதான கெமராவுடன் 5IP முன்புற கெமராவை கொண்டுள்ளதோடு, 360° Fill Light, Portrait Retouching, HDR உள்ளிட்ட புகைப்படங்களுக்கு மேம்படுத்தப்பட்ட பல சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளது. நீண்டநேரம் நீடித்துழைக்கும் 5000mAh பேட்டரியுடன் Super Power Saving Mode & Super Nighttime Standby போன்ற சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளதால் பேட்டரியின் ஆயுள் நீடிக்கிறது. A17 மாதிரி MediaTek Helio G35 Mobile Platform மூலம் இயக்கப்படுவதோடு இதிலுள்ள CPU 2.3GHz வரையான செயல்திறனுடன் இயங்குகிறது. மேலும் இதில் 4GB வரை இதன் RAM மற்றும் SD Card 1TB வரை விரிவுபடுத்த முடியும்.


OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி நாடளாவிய ரீதியில் Abans காட்சியறைகளில், BuyAbans.com மற்றும் அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

## PortCityயில் சர்வதேச பாடசாலைகள் அமைக்க பிரித்தானிய சுயாதீன பாடசாலைகள் இணக்கம்

கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச பாடசாலையை அமைப்பதற்கான ஆர்வத்தை பிரித்தானிய சுயாதீன பாடசாலைகள் வெளிப்படுத்தியுள்ளன

மூன்று முன்னணி பிரித்தானிய சுயாதீன பாடசாலைகளின் சிரேஷ்ட தூதுக்குழுக்கள், கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச பாடசாலையொன்றை அமைப்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் கொழும்பு துறைமுக நகரத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுவதற்காக இம்மாத தொடக்கத்தில் கொழும்பு துறைமுக நகரத்துக்கு விஜயம் செய்தனர்.

இந்த பாடசாலைகள் 16ஆம் நூற்றாண்டு வரை பின்செல்லும் ஒரு வளமான பாரம்பரியம் மற்றும் கல்வியாளர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் சர்வதேச கூட்டாளர்களின் பல்வேறு சமூகத்தின் பக்கபலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மேலும், மாணவர்களின் சிறந்த சாதனைகள் மற்றும் Russell Groupஇல் உள்ள மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களில் நுழைவு அனுமதி மூலம் இணை பாடத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றில்



இவை சிறந்து விளங்குகின்றன.

கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள சர்வதேச பாடசாலையானது, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா போன்றவற்றில் உள்ள விடுதிப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் தெற்காசிய பிராந்தியத்தின் செல்வந்த சமூகத்தை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளுடன் சர்வதேசமயமாக்கல் மீது இலங்கை கொண்டுள்ள அர்ப்பணிப்பை நிரூபிப்பதாக அமையும். கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த கல்வி, வசதிகள், ஆசிரியர்கள் மற்றும் சர்வதேச அனுபவத்தை உறுதிசெய்ய பெற்றோர் பாடசாலையுடன் நெருக்கமாக ஒத்துழைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பௌத்த மத குருமார்களுக்கான ஆயுள் காப்புறுதி வழங்கும் சனச

பௌத்த சாசனத்தை மேம்படுத்துவதற்கும், பேணிப் பாதுகாப்பதற்கும் உதவும் வகையில், சனச ஆயுள் காப்புறுதியானது பௌத்த பிக்குகளுக்காக மிகவும் விசேடமாக மற்றும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. Pinsaru Vandana என்ற காப்புறுதிக் கொள்கையானது பௌத்த பிக்குகளின் விசேட தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் விசேட காப்புறுதித் திட்டத்தை வழங்குகிறது. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி கொழும்பிலுள்ள ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மந்திரயவில் சிரேஷ்ட பௌத்த மதகுருமார்கள் பலர் முன்னிலையில் மங்களகரமான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மொத்தம் 300 பௌத்த பிக்குகள் கலந்துகொண்டு, இந்த விசேட காப்புறுதித் திட்டத்திற்கு தமது ஆசிகளை வழங்கினர். விஷாவ பிரசாதினி, கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய மற்றும் பிரிவென பணிப்பாளர் வணக்கத்துக்குரிய வத்தினாபஹ சோமரதன தேரர் உட்பட முக்கியஸ்தர்கள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு முக்கிய பங்கு வகித்தனர்.

## ஆண்டின் சிறந்த தொழில்முயற்சியாளராக Pinnacals விருதை வென்ற MN குழுமம்

எமது நாட்டின் கட்டுமானத்துறையில் முதன்மையான நிறுவனமாக திகழும் MN குழுமம், Pinnacals Sri Lanka - 2022 விருது விழாவில் ஆண்டின் சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதை வென்றுள்ளது. மேற்படி விருது விழா பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதன்போது MN குழுமத்தின் www.mngroup.lk முகாமைத்துவப் பணிப்பாளர் ரொஷான் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடமிருந்து தமக்கான விருதை பெற்றுக்கொண்டார். MN குழுமம் இதற்கு முன்னரும் LBA, சிரமாபிமாணி உள்ளிட்ட ஏராளமான விருதுகளை வென்றுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு கட்டுமானத்துறையில் தேவையான எந்தவொரு சேவையினையும்



MN குழுமத்திடமிருந்து மிக நியாயமான விலையில் துரிதமாக பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக, பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக கட்டடங்களின் கட்டுமானங்களை நிறைவு செய்துகொள்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கும் MN குழுமம் தயாராக உள்ளது.

## Yara Technologies உடன் இணையும்

### யாழ். புனித ஜோன்ஸ், சுண்டிக்குளி பெண்கள் கல்லூரிகள்

Yara Technologies (Pvt) Ltd, யாழ். புனித ஜோன்ஸ் கல்லூரி மற்றும் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் Talkative Parents (பேசக்கூடிய பெற்றோர்) என்ற தளத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

பாடசாலைகளின் சார்பாக SJC மற்றும் CGC மற்றும் SJC87 பழைய மாணவர்களால் இந்த நிகழ்ச்சிக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது, இது SJC பழைய மாணவர்களின் முன்முயற்சியினால் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★ வரையறையற்ற டிஜிட்டல் அறிவித்தல்கள், முக்கிய நிகழ்வுகள் மற்றும் Mobile App மூலம் Students Reports (மாணவர் அறிக்கை அட்டை), பணிகள், கால அட்டவணை மற்றும் நேறளடநவவநசள போன்ற இணைப்புகள்

★ ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள்/ பெற்றோரின் துணைக்குழுக்களுக்கு (அதாவது பாடசாலை, தரம், வகுப்பு அடிப்படையில் அல்லது தனிநபருக்கு) தகவல்களை அனுப்புதல்

★ அங்கீகரிக்கப்பட்டவர்களுடன் நேரடியாக இணைக்க பெற்றோரை அனுமதிக்கும் இருவழி தனிப்பட்ட தகவல் பரிமாற்ற அம்சம்

★ மொபைல் போனுடன் ஒத்திசைக்கக்கூடிய பாடசாலை தொடர்பான நிகழ்வுகளைக் காட்டும் கலெண்டர்

★ பல மொழிகளில் குறுந்தகவல்களை பறிமாறுதல்

★ செலான் வங்கி PLC உடன் இணைந்து இணைய கட்டண நுழைவாயில் (Internet Payment Gateway - IPG) ) மூலம் Online பாடசாலை கட்டணத்தை செலுத்துதல்

★ IPG மூலம் பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தும் பெற்றோருக்கு எளிதான கட்டணத் திட்டங்கள் (Easy Payment Plans -EPPs)




கல்வி என்பது பாடசாலை, பெற்றோர்கள் மற்றும் சமூகத்தை உள்ளடக்கிய கூட்டிணைவாகும். எமது பராமரிப்பில் உள்ள மாணவர்களுக்கு சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒன்றிணைந்து செயல்படுவதே எங்கள் குறிக்கோள். பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரிடையே தகவல் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் எளிதாக்கவும் நாங்கள் விரும்புவதால், பேசக்கூடிய பெற்றோர் (Talkative Parents) என்ற தளத்தை நடைமுறைப்படுத்த Yara Technologies உடனான எங்கள் கூட்டு எங்கள் கல்லூரி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும் என CGCயின் அதிபர் திருமதி டி. துசீதரன் தெரிவித்தார்.

Yara Technologiesக்கு சொந்தமான TP EdTech தளத்தின் ஊடாக Cross Channel Communication, Online School பாடசாலைக் கட்டணம் செலுத்துதல், e-Learning மற்றும் AI Driven Data Analytics ஆகியவற்றை மேற்கொள்கிறது. Yara "Google for Education Integrated Solutions Initiative" மற்றும் Microsoft for Startups Founders Hub ஆகியவற்றில் அங்கத்துவம் வகிக்கிறது.

## தடையற்ற Wi-Fiக்கு Wi-Fi Meshஐ அறிமுகப்படுத்தும் Dialog




Dialog Smart Home அதன் எதிர்கால தயார்நிலை தீர்வுகளுக்கமைய சமீபத்திய மேலதிக, Wi-Fi Meshஐ அறிமுகப்படுத்தும் அதேவேளை, இது ஒரு முழுமையான மற்றும் மிகவும் பாதுகாப்பான வீட்டு Wi-Fi அமைப்பாக, குறைந்த கவரேஜ் புள்ளிகளை அகற்றுவதன் மூலம் வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் Wi-Fi இணைப்பை செயல்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். எளிதாக அமைக்கக்கூடிய Wi-Fi Mesh சாதனமானது, முழுமையான Wi-Fi கவரேஜையும் சிறந்த ஒன்லைன் அனுபவத்தையும் உறுதிசெய்யும் முகமாக, நவீனகால பயனர்களின் தேவைகளை நிவர்த்திசெய்வதுடன், முழு வீடு அல்லது அலுவலக வயர்லஸ் கவரேஜ்களில் smart home தீர்வுகள்/சாதனங்களின் தடையற்ற இணைப்பையும் இது உறுதிசெய்கிறது. Wi-Fi Meshஐ கட்டுகளாக (bundles) வாங்கலாம் மற்றும் Wi-Fi6- செயல்படுத்தப்பட்ட AX 1800 கட்டுகள் உட்பட இரண்டு மாதிரி (models) வடிவங்களில் இது கிடைக்கிறது, AX 1800 கட்டின் விலை ரூ. 34,990 மற்றும் AC 1200 கட்டின் விலை ரூ. 24,990 ஆகும். Wi-Fi Mesh சாதனங்களை www.dialog.lk/smarthome ஊடாக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் கொள்வனவு செய்யலாம்.

## 20ஆவது வருடமும் அனுசரணை வழங்கும் டேவிட் பீரிஸ் குழுமம்




வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு (Mercantile 'E' Division Cricket Tournament) தொடர்ச்சியாக 20ஆவது வருடமும் டேவிட் பீரிஸ் குழுமம் அனுசரணை வழங்குகிறது. வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தில் நடத்தப்படும் இரண்டாவது நீண்டகால கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு அனுசரணை வழங்குவதன் ஊடாக குழுமம் விளையாட்டுத் துறைக்கான ஊக்குவிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வமாக அனுசரணையைக் கையளிக்கும் நிகழ்வு 2023 ஜனவரி 04ஆம் திகதி வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தில் நடைபெற்றது. டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் பணிப்பாளர் திருமதி ரோமனி பராக்கிரம, டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் பணிப்பாளரும், பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான நாளக மதுகல்ல, அசெட்லைன் பைனான்ஸ் லிமிடெட்டின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அஜந்த பிரேமசிறி, டேவிட் பீரிஸ் ஹோட்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் குழுமத்தின் பிரதம சந்தைப்படுத்தல் தொடர்பாடல் அதிகாரி நாதி பி.தர்மசிறி, டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் பிரதி பொது முகாமையாளர் (வாகன விற்பனை) லக்மல் த சில்வா, வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவர் நளின் விக்ரமசிங்க, வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தின் அனுசரணையாளர் குழுவின் தலைவர் ரொஹான் சோமவன்ச மற்றும் ஊடகங்கங்கள், விருந்தினர்களின் பங்கேற்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

# பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் எழுச்சி நிகழ்வுகள்





(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

''விடுதலைக்காய் எழுச்சி கொள்வோம் பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்'' எனும் தொனிப்பொருளில் உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற நூறு கோடி மக்களின் எழுச்சி எனும் நிகழ்விற்கு இணையாக அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை(16) அக்கரைப்பற்று சின்னமுகத்துவார கடற்கரை பிரதேசத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அரங்கத்தின் தலைவி உள்ளிட்ட இணைப்பாளர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். ஆரம்ப நிகழ்வாக இளைஞர், யுவதிகள் இணைந்து பெண்கள் அடக்குமுறைக்கு எதிராக வாசகங்களை தாங்கிய சுலோக அட்டை மற்றும் பதாகைகளை தாங்கியவாறு அங்கிருந்து சைக்கிள் சவாரி மூலமாக சின்னமுகத்துவாரத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு மனித இனத்தில் கிட்டத்தட்ட சரிபாதியாக அடையாளங்காணப்படும் பெண்கள் மீதான வன்முறைகளை இல்லாதொழிக்க வேண்டுவதாகவும் இது தொடர்பிலான விழிப்புணர்வு பாடல்கள் மற்றும் உரையினையும் நிகழ்த்தினர்.

வன்முறைகளிலிருந்து விடுதலை பெற்ற சமூகங்களுக்காக எழுச்சி கொள்வோம், முதலாளித்துவத்தின் நுகர்வுப்பண்பாட்டிலிருந்து விடுதலை பெறுவோமென எழுச்சி கொள்வோம், பூமிக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர எழுச்சி கொள்வோம் போன்ற கருத்துகளையும் பாடல்கள் மூலமாகவும் பேச்சுகள் மூலமாகவும் வெளியிட்டனர்.

# புதிய தவிசாளர் கள விஜயம்

(கோணாவத்தை செய்தியாளர்)



சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக பதவியேற்றுள்ள ஐ.எல்.எம்.மாஹிர் ஹிஜ்றா பொதுச்சந்தையினை பார்வையிட்டுள்ளார்.

பிரதேச சபை உறுப்பினர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சந்தை மேற்பார்வையாளர்களுடன் சென்று பார்வையிட்ட தவிசாளர் சந்தையின் கட்டிடத் தொகுதியின் கடை உரிமையாளர்கள், பொதுமக்கள் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தேவைகளையும் கேட்டறிந்தார். இதேவேளை, இங்கு காணப்படும் மீன் சந்தை தொகுதியின் அடிப்படைத் தேவைகளையும் மீன் வியாபாரிகளின் குறைபாடுகளையும் எதிர்காலத்தில் நிவர்த்திசெய்து தருவதாகவும் தவிசாளர் உறுதியளித்தார்.



பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் இரவுநேர கற்றல் செயற்பாடுகளுக்காக பெற்றோர் ஒருவரினால் மின்பிறப்பாக்கி கையளிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பெற்றோரில் ஒருவரான சட்டத்தரணி எம்.எச்.ஹஸான் றுஸ்தி மின்பிறப்பாக்கியினை பாடசாலை அதிபர் பி.முஹாஜிரின் உட்பட உதவி அதிபர்களிடம் கையளிப்பதை காணலாம்.

(பாலமுனை செய்தியாளர்)

# விவசாயிகளுக்கு வழங்கப்படாதுள்ள உதவித்தொகையை வழங்கக் கோரிக்கை

(அக்கரைப்பற்று செய்தியாளர்)

அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை, வழங்கப்படாதுள்ள விவசாயிகளுக்கும் உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சரிடம் அம்பாறை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பெரும்போக விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் ஒரு ஹெக்டேயருக்கு 10 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

நெற்செய்கை மேற்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் இக் கொடுப்பனவு வங்கிகளில் வைப்புச் செய்யப்படவில்லை. குறிப்பிட்ட சில விவசாயிகளின் இலங்கை வங்கி கணக்குகளுக்கு மாத்திரமே ஒரு ஹெக்டேயருக்கு 10 ஆயிரம் ரூபா பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், ஏனைய வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு இன்னும் பணம் வைப்புச் செய்யப்படவில்லை.

குறிப்பிட்ட சில விவசாயிகளின் இலங்கை வங்கிக் கணக்குகளுக்கு பணம் வைப்புச் செய்யப்பட்டு சுமார் 40 நாட்கள் கடந்தும் ஏனைய விவசாயிகளுக்கு இன்னும் பணம் வைப்புச் செய்யப்படாமை குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். பெரும்போக நெல் அறுவடை தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சிறுபோகத்திற்கு முன்னர் ஒரு ஹெக்டேயருக்கான 10 ஆயிரம் ரூபா பணத்தினை உடனடியாக வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரிடம் அம்பாறை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



பாலமுனை போதை தடுப்புக் குழுவின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாலமுனை இரு வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் போதைக்கு எதிரான பிரகடனத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாலமுனை போதை தடுப்புக் குழுவின் இணைப்பாளரும் திருக்கோயில் பிரதேச செயலக உளவள உத்தியோகத்தருமான எஸ்.ஆப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். (பாலமுனை செய்தியாளர்)

# திருகோணமலை உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கருத்தரங்கு



(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா கிளையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் தலா 03 வேட்பாளர்களும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சர்வமதக் குழுமத்தின் உறுப்பினர்கள் என அனைவரும் கலந்துகொண்டிருந்தனர். நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளை யும் தேசிய சமாதானப் பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு (ARC) எனும் துணைப்பொருளில், சர்வமதக்குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் இங்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்குபற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளராக தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ. மதனி உவைஸ், சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள், சமூகமட்ட செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மொழி பாடநெறியின் இறுதி நிறைவு நாள் நிகழ்வு





(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தமிழ்ப்பேசும் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழி பாடநெறியின் இறுதி நிறைவு நாள் நிகழ்வு பிரதேச செயலகத்தில் புதன்கிழமை(15)மாலை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற சிங்கள மொழி பாடநெறியானது 150 மணித்தியாலயங்களைக்கொண்ட குறித்த பாடநெறியானது தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாட்டில் இடம் பெற்றது. இதில் சிங்கள பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளை தமிழ்ப்பேசும் உத்தியோகத்தர்கள் மேடையேற்றி அலங்கரித்தனர். மொழி போதனாசிரியர்களுக்கான பரிசில்களையும் இதன்போது பிரதேச செயலாளர் வழங்கினார்.

இதில் 62 அரச ஊழியர்கள் இப் பாடநெறியை நிறைவு செய்தனர். குறித்த நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர, சிங்கள மொழி போதனாசிரியர்கள், மாவட்ட செயலக மொழி இணைப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சிவராத்திரி விழிப்புணர்வு கொடி வாரம் அனுஷ்டிப்பு





(கல்லடி செய்தியாளர்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு அகில உலக இளம் சைவ மன்றத்தினால் சிவராத்திரி தின விழிப்புணர்வு கொடி வாரம் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், இவ்வருடம் கொடி வாரத்தினை ஆரம்பித்து வைக்கும்முகமாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவுக்கு சிவராத்திரி தின விழிப்புணர்வு கொடி முதலாவதாக அணிவிக்கப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

உலக இளம் சைவ மன்றத்தின் செயலாளர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கீ.குணநாயகம், மன்றத்தின் பொருளாளர் பீ.ஜெயகாந்தன், மன்றத்தின் பிரதிநிதிகளான எஸ்.சாம்பவி, வி.நியோமிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

இதன்போது இளம் சைவ மன்றத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னமும் அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டதுடன், அனைத்து சமய நம்பிக்கைகளை உள்ளடக்கிய "உலகெலாம்" எனும் நூலின் பிரதி அதன் ஆசிரியர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயரினால் அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டதுடன், மாவட்ட செயலக உயரதிகாரிகள் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கும் இதன்போது கொடி அணிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றி வந்த ரிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றி வந்த வாகனத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த ரிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை(16) ஆஜர்படுத்தியபோது 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக அர்சத் கடமையேற்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருதைச் சேர்ந்த டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் வியாழக்கிழமை(16) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் யூ.எல்.எம். நியாஸ் உள்ளிட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். கடந்த காலங்களில் கல்முனை மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் மாநகர சுகாதாரப் பிரிவினூடாக பல்வேறு சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்ததுடன், பாவனைக்கு உதவாத வகையில் ஒதுக்கப்பட்ட இயந்திரங்களை மீள் பழுது பார்ப்பினூடாக மக்களுக்கு உதவும் வகையில் மாற்றியமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் 41ஆவது ஆண்டு விழாவும் அரங்கேற்ற நிகழ்வும்





(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் 41ஆவது ஆண்டு விழாவும் மன்றத்தின் இளம் கலைஞர்களை வெளிக்கொணரும் நிகழ்வும் நேற்று வியாழக்கிழமை(16) சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தின் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் செயலாளர் அண்ணாவியார் எம்.எச். பைஸர் மற்றும் மருதூர் தக்வா கோலாட்ட குழுவின் தலைவர் ஏ.எஸ். அன்வர் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஷ்குமார், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீக்கா, சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.றிம்ஸான் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இளம் கலைஞர்களின் பொல்லடி எனப்படும் கோலாட்ட நிகழ்வு அதிதிகள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதோடு, இவர்களது திறமைகளும் அதிதிகளால் பாராட்டியும் பேசப்பட்டன. சிரேஷ்ட அண்ணாவியார்களான ஏ.இஸ்ஸதீன், அபூபக்கர், சுலைமான், அமைப்பின் தலைவர் ஏ.எஸ்.அன்வர் ஆகியோர் கலைக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் விசேடமாக அதிதிகள் புடைசூழ, அமைப்பின் செயலாளரும் கோலாட்டக் குழுவின் பயிற்றுவிப்பாளருமான சிரேஷ்ட அண்ணாவியார் எம்.எச். பைஸர் மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் இளம் கலைஞர்களினால் நினைவுச்சின்னம் வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் புதிய கலைஞர்களான இளம் கலைஞர்களின் திறமைகளைப் பாராட்டி அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது மருதூர் தக்வா கோலாட்டக் குழுவின் உறுப்பினர்களின் கஸீதா, கவிதை, சிலம்பாட்டம், நாட்டார் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளும் நிகழ்வை மேலும் மெருகூட்டின.







கிரான் இந்து சமய வளர்ச்சி மன்றத்தினால் முன்பள்ளி மாணவர்களின் ஆங்கில அறிவுத்திறனை சிறுபராயம் முதல் விருத்திசெய்யும் முகமாக நடத்தப்பட்டுவரும் அன்னை ஸ்ரீசாரதா தேவி ஆங்கில முன்பள்ளியின் 2022ஆம் ஆண்டிற்கான கலை விழாவும் பிரிவுபசார வைபவமும் கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் முன்பள்ளியின் அதிபர் திருமதி ரவிக்குமார் வசுமதியின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு தரம் 1இற்கு செல்லும் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (வாழைச்சேனை செய்தியாளர்)

# இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டால் எமது மண் முற்றாக அழிந்துவிடும்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்




(புளியந்தீவு செய்தியாளர், அப்துல்சலாம் யாசீம்)

விவசாயத்திற்கு இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டால் 2050ஆம் ஆண்டளவில் எமது மண் முற்றாக அழிந்துவிடும். அப்படி நடந்தால் மண்ணை மீட்க முடியாது - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமான பீஸ் வின் மூலம் திருகோணமலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும் விவசாய உணவு உற்பத்திச் சந்தையும் என்ற தலைப்பிலான அறிமுகக் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய துதுவர் மிசுகோஷி ஹிடேகியும் கலந்துகொண்டிருந்தார். இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர்,

எங்கள் மண்ணைப் பாதுகாப்பதை ஒருபோதும் தள்ளிப் போடக்கூடாது. இன்றுமுதல் நாம் அதனை பின்பற்ற வேண்டும். எமது நாட்டில் 02 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ளும் பெருமளவிலான விவசாயிகள் உள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள விவசாயிகள் இவ்வாறான விடயங்களுக்குப் பழகிக்கொள்ள வேண்டும். விஷமில்லா உணவுக்காக ஜப்பானில் மிக முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவை உள்ளது. எனவே, இதுபோன்ற நட வடிக்கைகளுக்கு உதவி வழங்கியதற்காக ஜப்பான் தூதருக்கு நான் குறிப்பாக நன்றியுள்ளவனாக இருக்கிறேன் - என்றார்.

இந்த வைபவத்தின் பின்னர் ஜப்பானிய தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தில் விவசாயம், தொல்லியல் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு ஜப்பானில் இருந்து புதிய முதலீட்டாளர்களை வரவழைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென ஆளுநர் இதன்போது கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

மேலும், திருகோண மலை மாவட்டத்தில் அமைந்துள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் ஜப்பான் அரசாங்கத்தின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக தூதரிடம் ஆளுநர் வலியுறுத்தினார்.

# தமிழர்களுக்கு தீர்வின்றேல் முஸ்லிம்களுக்கும் தீர்வில்லை!

## முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் அப்துல் மஜீத்



(சாய்ந்தமருது செய்தியாளர்)

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தானது எனவும் அது முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பாக அமைந்துவிடலாம் எனவும் சிலர் கூறுவது அவர்களது அறியாமையாகும். உண்மையில் இத்தகைய அதிகாரப் பகிர்வின் மூலம்தான் முஸ்லிம்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழர்களுக்குத் தீர்வின்றேல் முஸ்லிம்களுக்கும் தீர்வில்லை என்பதை ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன் எனவும் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட முதலாவது குடியரசு சாசனம் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை முழுவதுமாக புறந்தள்ளி சிங்கள - பௌத்த மேலாண்மையை வலியுறுத்தி நின்றது. குறிப்பாக, சோல்பரி அரசியல் யாப்பில் இடம்பெற்றிருந்த செனட் சபை (மூதவை) இல்லாதொழிக்கப்பட்டதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகவும் சிங்கள மொழியை அரச கரும மொழியாகவும் பிரகடனம் செய்திருந்தது. அக்குடியரசு சாசனத்தை தமிழ் மக்கள் எதிர்த்து நின்றதுடன், அப்போது நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அமிர்தலிங்கம் பகிரங்கமாக அரசியலமைப்பை தீயிட்டுக் கொளுத்தினார். இதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அதுபோல், கடந்த 8ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரை நிகழ்த்திக்கொண்டிருக்கையில், பௌத்த பிக்குமார் பாராளுமன்றை நோக்கி ஆர்ப்பாட்டமாக சென்றதுடன் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தினர். அவர்களை பொலிஸார் கைதுசெய்ய முன்வரவில்லை. பொலிஸாரின் அச் செயலானது நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளதுபோல் எண்ணத் தோன்றுகிறது. 1957ஆம் ஆண்டுசெய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான பிக்குமார் பிரதமரின் இல்லத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் இருந்தனர். இதனால் வேறு வழியின்றி அவ்வொப்பந்தம் கிழித்து வீசப்பட்டது. 1965இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தத்தை அன்றைய எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியினர் தோல்வியடையச் செய்தனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை தோல்வியைத் தழுவிக்கொண்டது போல் மாகாண சபை முறைமையையும் தோல்வியடையச் செய்வதற்கு பௌத்த - சிங்கள கடும் போக்குவாதிகள் முயன்றுகொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

13ஆவது திருத்தம் என்பதும் அதிகாரப் பகிர்வு என்பதும் தமிழ் மக்களுக்கே உரித்தான சொந்த விடயம் எனவும் முஸ்லிம் சமூகத்தில் பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். அது அவர்களின் அரசியல் அறியாமையை பிரதிபலிக்கின்றது. அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு, கிழக்கிற்கு மாத்திரமன்றி அதற்கு வெளியே உள்ள 07 மாகாண சபைகளுக்கும் உரியது என்பதனையும் விசேடமாக சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளையும், பிராந்திய அபிவிருத்தியையும் அவர்களது வாழ்விடங்களை உறுதிப்படுத்துவதும் அதில் தங்கியுள்ளது என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட முன்வர வேண்டும்- என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 13ஆவது திருத்தத்தை முற்றாக ஒழிக்கக் கோரினால் மீண்டும் நாட்டின் அமைதியை இழக்க நேரிடும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 36வருடங்கள் முடிவடைந்தபோதிலும் முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலை தொடர்கின்றது. தமிழ்த் தலைவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை அரசியல் தீர்வின் தொடக்கப்புள்ளி மட்டும்தான் என ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் நமது நாட்டில் சில சிங்களக் கட்சிகளின் தலைவர்களும், பௌத்தமதத் தலைவர்களும் இனவாதிகளும் இணைந்து 13ஐ முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கூறுவது மீண்டும் நமது நாட்டில் அமைதியை இழக்கவேண்டிய நிலை உருவாகலாம் - என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள், இளைஞர் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் அட்டாளைச்சேனை இக்றாஹ் வட்டாரத்தில் மு.கா. உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இந்த நாடு பௌத்த நாடு. இங்கு 13ஐ முழுமையாக அமுல்படுத்த முடியாது. பிக்குகள் எதிர்ப்பதால் எதுவும் செய்ய முடியாது என்றார். சரத் விஜேசேகர எம்.பி. 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார். விமல் வீரவங்ச எம்.பி. 13ஐ பாராளுமன்றத்தின் ஊடாக இல்லாமல் செய்யவேண்டுமெனக் கூறுகின்றார். இவர்கள் கடந்த 30 வருட கால யுத்த நிலைமையை மறந்து இனவாதம் பேசுகின்றனர். யுத்தத்தில் வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி முழு நாட்டிலும் அமைதியற்ற நிலையும் அச்சமும் ஏற்பட்டது என்பதை 13ஐ முற்றாக ஒழிக்க வேண்டுமென பொங்கியெழும் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களும், பௌத்த தலைவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்று நமது நாட்டில் அரசுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்துள்ளார்கள். பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயல்படுகின்றனர். ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றால் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி சகோதரக் கட்சிகளுடன் இணைந்து, அதிகமான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் கிராம மட்டத்தில் மக்களுடன் இணைந்து நமது கட்சி வளர்ச்சியில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும். இந்த அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க 23 தடவைகள் முயற்சி செய்திருக்கின்றது. ஜனநாயக உரிமைகளை மதிக்காது தேர்தலை ஒத்திவைத்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய சகோதரக் கட்சிகளுடன் இணைந்து தேர்தலை நடத்தக்கோரி மக்கள் பேரணிகளை நடத்தும் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னெடுத்து வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிவராத்திரி நிகழ்வு

(காரைதீவு நிருபர்)

காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன. சனிக்கிழமை 18 ஆம் திகதி மாலை முதல் நான்கு ஜாமப் பூசைகளும் சிவலிங்க மூர்த்திக்கு விசேட அபிஷேகம் அர்ச்சனையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை வரை மிகச் சிறப்பாக நடைபெற விருக்கிறது.

அன்றைய தினம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிவராத்திரியின் மகிமை பற்றிய உரைகள், பண்ணிசை பாடல்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு பிள்ளைகளின் தந்தை குவைத்தில் அகால மரணம்

(சீனக்குடா செய்தியாளர்)



திருகோணமலை, முள்ளிப்பொத்தானை, 96ஆம் மைல்கல்லைச் சேர்ந்த குலாம் நாஹிர், குவைத் நாட்டில் ஏற்பட்ட வாகன விபத்தொன்றில் புதன்கிழமை (15) அகால மரணமானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், பொருளாதார நெருக்கடி காரணமாக, பல இலட்ச ரூபா கடன்பெற்று, இரண்டு மாதங்களுக்கு முன்னர் குவைத் நாட்டிற்கு வேலை தேடிச் சென்றவராவார்.

இவரின் ஜனாஸா குவைத் நாட்டில் வியாழக்கிழமை (16) நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆலோசகர் ஆளணி வெற்றிடத்தை நிரப்பக் கோரிக்கை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மொழி ரீதியாகவும் பாடரீதியாகவும் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டுமென பல்வேறு கல்விசார் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஆசிரிய ஆலோசகர்கள் பலர் ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள் கல்வி அமைச்சினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட நிலையில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சையில் தற்போது தற்காலிகமாக கடமையாற்றுவோர் இணைப்பாளர்களாக ஆசிரிய ஆலோசக உதவியாளர்களாக செயல்படுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆளணி வெற்றிடங்கள் கருப்பாடங்களுக்கு மட்டுமன்றி தொகுதிப் பாடங்களுக்கும் காணப்படுவதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புதிய கல்வித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையில், தனிப்பட்ட வெளிவாரி மதிப்பீடுகளை பாடசாலைகளில் ஆரோக்கியமாக மேற்கொள்ள ஆசிரிய ஆலோசகரின் சேவையின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம்




(கிண்ணியா செய்தியாளர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற குறித்த 4ஆவது காலாண்டுக்கான (2022) கூட்டத்தில் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் கணக்காய்வு உள்ளிட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. சிறப்பான கணக்காய்வை அரச அலுவலகங்களில்பேணும் வகையிலும் உத்தியோகத்தர்களின் வகிபாகத்தை சரியாக மேற்கொள்ளும் நோக்கில் தேவையான வழிகாட்டல்கள் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்படும்.

குறித்த கணக்காய்வு முகாமைத்துவக்குழு கூட்டத்தில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப் மற்றும் தேசிய கணக்காய்வு அத்தியட்சகர் வை.பி.நிசார் ஆகியோர் கலந்துகொண்டு கூட்டத்தை வழிநடத்தினர். நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# சிவராத்திரியன்று இந்து மக்கள் சமயாசார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்

## காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் வேண்டுகோள்

(காரைதீவு செய்தியாளர்)

சனிக்கிழமை 18ஆம் திகதி மகா சிவராத்திரி தினமாகும். அன்றைய தினம் இந்து மக்களின் முக்கிய தினமாகையால், அத்தினத்தன்று சகல இந்து மக்களையும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டு தமது இல்லங்களிலும் இந்து நிறுவனங்களிலும் அறநெறிப் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் சைவசமய சீலங்களைப் பிரதிபலிக்கும் சிவனுக்குரிய நந்திக்கொடியினை ஏற்றி வழிபடுமாறு இந்து மக்கள் அனைவரும் கேட்கப்படுகின்றனர்.

மேலும், இந்து ஆலயங்களில் சமய முறைப்படி வழிபாடு நடக்க வேண்டுமென்றும் ஆலயங்களில் கண் விழித்தலின்போது தேவையற்ற நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஆலயங்களில் சிவ பஜனைகள், பாராயணம், சிவராத்திரியின் மகிமை பற்றிய உரைகள் என்பவற்றை நடத்தும்படியும் காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# போடியார் புலம்பல்!



கரண்டுக்கு ஆக்களிட்ட 66 வீதம் கூட்டி அறவிடப்போறாங்களாம் எலுவா..? அது இப்படி இருக்க இலங்கைக்கான இந்திய தூதுவர் ஒரு குண்டடப்போட்டிருக்காரு இலங்கை வடக்கில இருந்து இந்தியாவுக்கு மின்சாரத்த அனுப்ப போறாராம் இதற்கான ஒப்பந்தம் கெதியா கைச்சாத்தாகுமாம். இதப் பார்த்தா சிரிக்கிறதா குழறிறதா எண்டு எனக்கு தெரியல்ல ஆனமான கோயில் எல்லாம் அடிதண்டம் புடி தண்டம் வெறுவாங்கிலம் கெட்ட கோயிலில விடி விளக்கு பத்துதாம் ஆரிட்ட சொல்லுற.?

# அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார அதிகாரியாக இஸ்ஸடீன் நியமனம்

(பொத்துவில், திராய்கேணி செய்தியாளர்கள்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் நியமிக்கப்பட்டுள்ளார். அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வெற்றிடம் கடந்த பல மாதங்களாக காணப்பட்டுவந்த நிலையில், அந்த இடத்திற்கு டொக்டர் இஸ்ஸடீன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் செவ்வாய்க்கிழமை (14) அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் தனது கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த டொக்டர் இஸ்ஸடீன் 1998 பேராதனை பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை பட்டப்படிப்பினை நிறைவு செய்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றியுள்ளார். நிந்தவூர், பொத்துவில் மாவட்ட வைத்தியசாலைகளில் மாவட்ட வைத்திய அதிகாரியாக பணியாற்றிய இவர், கோமாரி மத்திய மருந்தகத்தின் வைத்திய பொறுப்பதிகாரியாகவும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும் குறிப்பிட்ட காலம் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இவர் தற்போது பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிவந்த நிலையில், 2023.02.14ஆம் திகதிமுதல் செயற்படும் வண்ணம் அட்டாளைச் சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

டொக்டர் இஸ்ஸடீன் லயன்ஸ் கிளப் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவை அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகித்து பொத்துவில் பிரதேசத்தில் பல்வேறு சமூகப்பணிகளை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்வாக சேவை அதிகாரி கௌரவிப்பு

(மருதமுனை செய்தியாளர்)

38 வருடகால அரச சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற மருதமுனையின் முதல் நிர்வாக சேவை அதிகாரி ஏ.எச்.எம்.அன்சார் கல்முனை பிரதேச செயலகத்தால் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை பிரதேச செயலகத்தின் சன் குளோமிங் ஒன்றுகூடலும், கௌரவிப்பும் சனிக்கிழமை(11) மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நடைபெற்றது. இதன்போது கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டபோதே கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன், பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி ஆகியோர் ஏ.எச்.எம்.அன்சாரின் 38 வருட அரச சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.



இதன்போது விசேட அதிதிகளாக பிரதேச செயலாளர்களான அய்ஷெய்க் எம்.எஸ்.எம்.ரஸ்ஸான், சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப், எம்.எம்.ஆஷிக், பிர்னாஸ் இஸ்மாயில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் எ.எஸ்.எம். அஸீம், உதவிப் பிரதேச செயலாளர்களான ஜெசான் ஆஷிக், அய்மா நிஃமத்துல்லா ஆகியோருடன் அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.எல்.ஆதம்பாவா, கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யு.எல்.ஜவாஹிர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இங்கு ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துருக்கி - சிரிய நிலநடுக்கம்: அதிகரிக்கும் உயிரிழப்புகள்!

## பாதிப்புப் பகுதிகளில் துர்நாற்றம்; இடிபாடுகளிடையே இன்னமும் கேட்கும் மெல்லிய அபயக் குரல்கள்

**இன்று 12ஆவது நாளாகவும் தொடரும் மீட்புப் பணிகள்**



**து**ருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 41 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள நிலையில், இன்று 12ஆவது நாளாகவும் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நிலநடுக்கம் ஏற்பட்டு 12 நாட்களாகின்ற நிலையில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளதுடன், இன்னமும் சில இடிபாடுகளுக்கு அடியிலிருந்து மெல்லிய அபயக் குரல்கள் கேட்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துருக்கியில் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி அதிகாலை 4.17 மணியளவில் 7.8 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் துருக்கி மற்றும்



சிரியாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41 ஆயிரத்தைக் கடந்துள்ளது. கட்டட இடிபாடுகளை தோண்டத் தோண்ட சடலங்கள் மீட்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்நிலையில், துருக்கியின் அன்டாக்கியா நகரில் நேற்றுமுன்தினம் 228 மணி நேரத்துக்குப் பின்னர் தாயொருவரும் இரண்டு குழந்தைகளும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளமை குறப்பிடத்தக்கது.

இதேவேளை, நிலநடுக்கம் நிகழ்ந்து இன்று 12 நாட்களாகியுள்ள நிலையில் கட்டட இடிபாடுகளிலிருந்து சிலர் உயிருடன் மீட்கப்படுவது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுடன், மீட்புப் பணியாளர்கள் பணிகளை விரைவுபடுத்தியுள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகள் எங்கும் துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. மலைபோல் கட்டடக் கழிவுகள் குவிந்துகிடக்க, இன்னமும் சில இடிபாடுகளுக்கு அடியிலிருந்து அபயக் குரல்கள் கேட்கின்றன.

இதுகுறித்து துருக்கியில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள சல்மான் அல்தீன் என்பவர் தெரிவிக்கையில்,

''நான் அன்டாக்கியா பகுதியில் கடந்த ஒரு வாரமாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளேன். நான் இத்தனை மரணங்களையும் இவ்வளவு உடல்களையும் என் ஆயுளில் பார்த்ததில்லை. அர்மகடான் படத்தில் வரும் காட்சிகள்போல் இங்கே நிலைமை இருக்கிறது. இந்த நகரம் முழுவதுமே பிண துர்நாற்றம் வீசுகிறது'' என்று அழுகையுடன் தெரிவித்துள்ளார்.

**இடிபாடுகளுக்கிடையே கேட்கும் அபயக் குரல்**

இடிபாடுகளில் சிக்கியிருப்போரை மீட்பதைக் காட்டிலும் வீடின்றி உறைபனியில் உயிருடன் தவிப்போருக்கு உதவிகளைச் செய்வதில் மீட்புக் குழுவினரின் கவனம் திரும்பியுள்ளது. ஆனாலும், தெற்கு துருக்கியில் ஆங்காங்கே இடிபாடுகளுக்கு இடையே இருந்து இன்னும் மெல்லிய அபயக் குரல்கள் கேட்பதாக மீட்புக் குழுவினர் கூறுகின்றனர். அவ்வாறு கேட்கும் பகுதிகளில் மீட்புக் குழுவினர் உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய துருக்கி ஜனாதிபதி எர்டோகன், "இப்போது இங்கு நிலைமை கட்டுக்குள் உள்ளது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இயற்கைப் பேரிடரை துருக்கி எதிர்கொண்டுள்ளது. இது மனிதகுலத்திற்கே ஒரு சவால்தான். எங்கள் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவையான பொருள் மற்றும் நிதியுதவியையும், உணர்வுபூர்வ ஆறுதலையும் தருவோம்''- என்றார்.

**மன அழுத்தத்தில் தவிக்கும் குழந்தைகள்**

துருக்கி, சிரியாவில் குழந்தைகள் பலரும் உளவியல் சிக்கலுக்கு ஆளாகியுள்ளனர். ஒரே நாளில் தாங்கள் வாழ்ந்த வீடு, உடைமைகளை இழந்து வீதிகளில் தஞ்சமடைந்தது, மிகப் பெரிய சத்தம், கட்டிட இடிபாடுகள் என அவர்கள் வெகுவாகவே பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிரியாவின் அலெப்போ நகரைச் சேர்ந்த 9 வயது சிறுவன் தூக்கத்தில் திடீரென அலறி எழுந்து, ''அப்பா நிலநடுக்கம்.. நிலநடுக்கம்'' என்று அழுவதாக அவருடைய தந்தை ஹசன் மோஸ் கூறுகிறார். துருக்கி, சிரியாவில் 7 மில்லியன் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

துருக்கி, சிரியாவில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நிலநடுக்கப் பாதிப்பு பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர். அப்பகுதிகள், வாழத் தகுதியற்ற பகுதிகளாக மாறிவிட்டதாக மக்கள் கூறுகின்றனர்.

# லிபியக் கடலில் கவிழ்ந்த அகதிகள் படகு

## 73 பேர் உயிரிழப்பு; 7 பேர் உயிருடன் மீட்பு!



வட ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பா நோக்கி அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 73 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஏராளமான அகதிகள் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தான கடல் பயணம் மேற்கொள்கின்றனர்.

அந்தவகையில், கஸ்ர் அல்காயரிலிருந்து 80 பேருடன் சென்ற படகு, லிபிய கடற்கரையில் கவிழ்ந்தது. இதில், 73 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகக் கூறப்படும் நிலையில், இதுவரை 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீரில் தத்தளித்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 7 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# துருக்கி - நியூசிலாந்தை தொடர்ந்து பிலிப்பைன்ஸை உலுக்கிய நிலநடுக்கம்

**து**ருக்கி, நியூசிலாந்தை தொடர்ந்து பிலிப்பைன்ஸில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது.

பிலிப்பைன்ஸின் மாஸ்பேட் தீவிலுள்ள மியாகா என்ற இடத்தில் 11 கிலோமீற்றர் ஆழத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று (16) அதிகாலை 2 மணியளவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. இதனால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தை தொடர்ந்து சுமார் ஒரு மணிநேரம் கழித்து பின்அதிர்வுகள் ஏற்பட்டதால் பல இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

மாஸ்பேட் நகரில் அடுத்தடுத்து பின்அதிர்வுகள் உணரப்படுவதால் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட 3 சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் இதுவரை 41 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் நியூசிலாந்தில் 6.1 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# இங்கிலாந்து லயன்ஸ் அணியிடம் வீழ்ந்த இலங்கை 'ஏ' அணி

சுற்றுலா இங்கிலாந்து லயன்ஸ் மற்றும் இலங்கை 'ஏ' அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து லயன்ஸ் அணி 4 விக்கெட்டுகளினால் இலகு வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகள்கொண்ட உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை 'ஏ' அணி முதலில் துடுப்பெடுத்தாடி 45.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் 231 என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பாடிய இங்கிலாந்து லயன்ஸ் அணி 40.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டியின் வெற்றியோடு மூன்று போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரில் இங்கிலாந்து லயன்ஸ் 1-0 என முன்னிலை அடைந்திருக்கின்றது. இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை சனிக்கிழமை இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பலம் வாய்ந்த ஆஸி. மகளிர் அணியை எதிர்கொண்ட இலங்கை

எட்டாவது ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் கடந்த 10ஆம் திகதி முதல் நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை அணி தங்களது மூன்றாவது ஆட்டத்தில் நேற்று இரவு பலம் வாய்ந்த ஆஸி. அணியை எதிர்கொண்டது.

முதல் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவிற்கு எதிராக 3 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நிலையில், இரண்டாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்றது. இந்நிலையில் மூன்றாவது ஆட்டத்தில் பலம்பொருந்த ஆஸி. மகளிர் அணியை எதிர்கொண்டது.

குறித்த ஆட்டம் இலங்கை நேரப்படி இரவு 6.30 மணிக்கு ஆரம்பமானது. இந்த ஆட்டத்தின் முடிவை தவிர்த்து இலங்கை அணி இரு வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. இதனடிப்படையில் இலங்கை அணி இன்னும் ஒரு வெற்றியை சுவைக்கும் பட்சத்தில் அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை பெற்றுவிடும்.

இலங்கை அணிக்கு இன்னும் நியூசிலாந்து அணியுடனான ஆட்டம் மாத்திரம் எஞ்சியிருக்கிறது. குழு 'ஏ' பிரிவில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளும், குழு 'பி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளும் உள்ளன.

லீக் சுற்றுப் போட்டிகள் நிறைவில் ஒவ்வொரு குழுவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டியில் மோதும். சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.



# ஆட்ட நிர்ணய சதியில் பங்களாதேஷ்



(ரமணி)

மகளிர் ரி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்களாதேஷ் அணி ஸ்பாட் பிக்ஸ் செய்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு (ஐ.சி.சி.) புகார் அளிக்கப்பட்டுள்ளதாக பி.சி.பி. தெரிவித்துள்ளது.

2023 மகளிர் ரி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் தங்கள் வீராங்கனை ஒருவர் ஸ்பாட் பிக்சிங் தரகரால் அணுகப்பட்டதாக பங்களாதேஷ் கிரிக்கெட் தலைவர்கள் புதன்கிழமை தெரிவித்தனர். பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் மகளிர் பிரிவின் தலைவர் ஷபியுல் ஆலம் நடேல், ஒரு வீரரை அணுகியதாக தென்னாபிரிக்காவிலுள்ள அணி நிர்வாகம் எங்களுக்குத் தெரிவித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்பாட் பிக்சிங் குற்றச்சாட்டின் விவரங்கள் கோடிட்டுக் காட்டப்பட்ட உரையாடலின் பதிவு இருப்பதாக ஊடக அறிக்கைகள் கூறுகின்றன. இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு (ஐ.சி.சி.) புகார் அளிக்கப்பட்டுள்ளதாக பி.சி.பி. தெரிவித்துள்ளது. இந்த விடயத்தை நாங்கள் ஐ.சி.சிக்கு தெரிவித்தோம். இப்போது அவர்கள் தேவையான நடவடிக்கை எடுப்பார்கள். நாங்கள் எங்கள் மிக உயர்ந்த ஒத்துழைப்பை வழங்குவோம் என்று ஆலம் நாடெல் கூறினார்.

தற்போது தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை, நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கு எதிராக பங்களாதேஷ் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. இன்று நியூசிலாந்துக்கு எதிராக கேப்டவுனில் அடுத்த ஆட்டத்தில் விளையாடுகிறது.

# சுதந்திரக் கிண்ணம் - 2023 : வெற்றிக்கிண்ணம் பாலமுனை ட்ரைஸ்டார் வசமானது

(மாளிகைக்காடு, பாலமுனை நிருபர்கள்)

பாலமுனை ட்ரைஸ்டார் மற்றும் பாலமுனை அல்-அறபா அணிகளுக்கிடையிலான ஷிஹாப் கூல் எண்ட் கொட் மார்ட் சுதந்திர தின வெற்றிக்கிண்ண ரி20 கடினப்பந்து போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அறபா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 138 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ட்ரைஸ்டார் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 19.3 ஓவரில் 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பாலமுனை ட்ரைஸ்டார் வீரர் எஸ்.டீ.பாயிஸ் தெரிவுசெய்யப்பட்டதுடன், சகலதுறை வீரராக றிபான் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்போட்டியின் பிரதம அதிதியாக ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ் கலந்துகொண்டதுடன், அதிதிகளாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.றியாஸ், எம்.ஐ.மனாப், என்.டீ.அல்பி, சிபான் அஸீஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.






# தர்கா நகர் அல்-ஹம்றா மகா வித்தியாலய கிரிக்கெட் தொடரில் 2008ஆம் ஆண்டு அணி சம்பியன்





(பேருவளை பீ.எம். முக்தார்)

தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் 125ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அணிக்கு 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி, பாடசாலையில் கல்வி கற்ற சாதாரண தரப் பரீட்சை எழுதிய பழைய மாணவர்கள் குழுக்களுக்கு இடையில் அண்மையில் தர்கா நகர் பாகிர் மாக்கார் விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

1999ஆம் ஆண்டு அணி மற்றும் 2015ஆம் ஆண்டு அணிகளுக்கு இடையில் 7 குழுக்களில் 22 அணிகள் பங்கேற்றன. இறுதிப் போட்டிக்கு 2008ஆம் ஆண்டு அணியும் 2017ஆம் ஆண்டு அணியும் தெரிவாகின. இதில் 2008ஆம் ஆண்டு அணி வெற்றிபெற்று சம்பியனானது.

பாடசாலை அதிபர் திருமதி எம்.எவ்.எவ். பஸ்லியா தலைமையில் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இந்தப் போட்டித் தொடரை ஏற்பாடு செய்திருந்தன. இறுதி நிகழ்வின் போட்டி ஆரம்ப வைபவத்தில் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு, இறுதி நிகழ்வில் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் பிரதி பயிற்சியாளர் தர்கா நகரைச் சேர்ந்த நவீட் நவாஸ் கலந்து சிறப்பித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7